
# சோதிடமலர்

# SOTHIDA MALAR




உள்ளே............

- ✶ இம்மாதம் உங்களுக்கு எப்படி?
- ✶ விஜயதசமி எப்போது?
- ✶ கோசாரத்தில் சனீஸ்வரன்
- ✶ அதிஷ்ட எண் ஞானம்
- ✶ அன்னையைக் கண்டேன்
- ✶ ஆய்வு மன்றம்
- ✶ குறுக்கெழுத்துப் போட்டி

இன்னும் பல.

* * *

குரோதன ஹூ ஐப்பசி மீ

(17-10-85—15-11-85)

விலை ரூபா: 3-00



அறிஞர்களின் பாராட்டைப் பெற்ற சோதிட இதழ்

உ


# சோதிடமலர்

SOTHIDA MALAR

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

குரோதன ஸூ ஐப்பசி மீ
( 17 - 10 - 85 )

மலர் 8 | இதழ் 7


ஹே ஸ்வாமிநாத கருணாகர தீனபந்தோ
ஸ்ரீ பார்வதீச முகபங்கஜ பத்ம பந்தோ |
ஸ்ரீ சாதி தேவ கணபூஜித பாதபத்ம
வல்லீச நாதமம தேஹி கராவலம்பம் | |

காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்பிரான் தன்னடி [யார்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே.

## இறைஸ்வரூபம்

நீக்கமற எங்கும் நிறைந்துள்ள இறைவன் இமைப்போதும் நீங்காது எமது நெஞ்சில் குடிகொண்டிருக்கிறான். உள்ளத் தூய்மை இல்லாதார்க்கு இவ்வுண்மை விளங்குவதில்லை. ஒப்பில்லாத பக்தியால் மனதைப் பண்படுத்தியவர்களுக்கு "விறகில் தீயினன் பாலிற்படுநெய்போல மறைய நின்றுளனாக" உணரப்படுகிறான். கண்ணாடியில் சூரியன் போலவும் விறகில் தீ போன்றும், பாலில் நெய்யாகவும், கருவி, கரணங்கள் ஒய்ந்த பக்தர்களிடத்து அருளுருவாகவும் இறைவன் வீற்றிருக்கிறான்.

## தீபாவளித் திருநாள்

தீபாவளி முன் தினம் உலகத்தை அழித்து வந்த நரகாசுரனைக் கண்ணபிரான வதம் செய்தார். அப்போது அந்த அசுரன் தானிறக்கும் போது சிறிது ஞானம் பெற்றவனாய் என் மரணத்திற்காக ஒருவரும் கவலை கொள்ள வேண்டாம்; எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து கண்ண பிரான் அருளால் நான் பெற்ற விடுதலையைக் கொண்டாட வேண்டும் என்று கண்ணனிடமே வரம் கேட்டானும் என்கிறது பாகவதக்கதை. எப்படியிருந்தபோதும் ஞானமாகும் தீபங்களை வரிசை வரிசையாகஏற்றி அஞ்ஞான இருளை ஒழிக்கவேண்டுமென்பதே தீபாவளியின் உட்பொருளாகும். அஞ்ஞானவடிவினனான நரகாசுரனை நினைத்து அவனது துன்பங்கள் நீங்கவும், லக்ஷ்மீகரமான தீபங்களை ஏற்றி அஞ்ஞான இருள் மறையவும் வேண்டுவதே இம்மானிலத்தாரின் கடனாகும். நாமும் முதன் நாளாகிய நரக சதுர்த்தசி இரவு எண்ணெய் நீராடி குலதெய்வத்தை நினைத்து புத்தாடை புனைந்து இறை வழிபாடாற்றி, வரும் விருந்தினர்க்கு தாம்பூலம், சந்தனம், பழவகைகள் பலகாரங்கள் அன்புடன் அளித்து மகிழ்ந்து தீபம் ஏற்றி தெய்வம் தொழுது உள்ளம் மிளிர அன்புணர்வு மேலோங்க வெற்றியுடன் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோமாக.

## கேதாரகௌரி விரதாரம்பம்

இமயமலைப் பகுதியில் கேதாரம் என்பது ஓர் சிவஸ்தலம். இத்தல மூர்த்திக்கு கேதாரநாதர் எனப்பெயர் கூறப்படுகிறது. உமாதேவியார் தம் சாபநீக்கத்தின் பொருட்டு கேதாரீஸ்வரரைக் குறித்து அனுட்டித்த விரதமாகும். இவ்விரதத்தை அனுட்டிப்பவர்கள் "ஆஸ்வயுக் சுக்லபக்ஷே து தசமி யுக்த வாசரே" கேதாரகௌரி விரதத்தை (ஐப்பசி சுக்ல தசமியன்று) குருவிஞானியுடன் ஆரம்பிக்கவேண்டும். இருபத்தொரு இழைகள் கொண்ட நூல் இருபத்தொரு முடிச்சிட்டு கும்பத்தில் சாத்தி இருபத்தோராம் நாள் (ஐப்பசி அமாவாசையன்று) இரவில் மீண்டும்பூஜை செய்து அந்நூலைப் பெண்கள் தமது இடக்கையில் கட்டிக்கொள்ளவேண்டும். இவ்விரதத்தைப் பக்தியுடன் அனுட்டிப்பவர்கள் சிறந்த செல்வத்தையும் மனத்திற்கேற்ற கணவனையும், நற்குண புத்திரர்களையும் பெற்றுப் பலகாலம் சிறப்புடன் வாழ்வார்கள்.

# நாள் எப்படி?

**ஐப் 1 வியா** (17-10-85) சதுர்த்தி இரவு 8-25 வரை. அனுஷம்-சித்தம் மாலை 5-22 வரை, சதுர்த்தி விரதம். மாலை 5-22க்குள் அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 1-32—3-02

**ஐப் வெள்** (18-10-85) பஞ்சமி மாலை 5-47 வ. கேட்டை-மரணம் பகல் 3-26 வரை, அசுபதினம் ராகு 10-32—12-02

**ஐப் 3 சனி** (19-10-85) ஷஷ்டி-சித்தம் பகல் 3-42வ. மூலம் பகல் 2-00 வரை, ஷஷ்டி விரதம். முக்கிய கருமங்களை பகல் 3-42க்கு முன்செய்யலாம். ராகு 9-02—10-32

**ஐப் 4 ஞாயி** (20-10-85) ஸப்தமி பகல் 2-13 வரை, பூராடம் பகல் 1-11 வரை. சித்தாமிர்தம், அசுபதினம். ராகு 4-32—6-02

**ஐப் 5 திங்** (21-10-85) அஷ்டமி பகல் 1-24 வரை, உத்தராட -மரணம் பகல் 1-01 வரை, மஹாநவமி ஸரஸ்வதி பூஜை, ஆயுதபூஜை, புத்தகங்கள், ஆயுதங்கள், வாகனங்கள் முதலிய சகல பொருட்களுக்கும் அவரவர் தத்தமக்குரிய பொருட்களைப் பூஜிக்கும் தினம். ராகு 7-32—9-02

**ஐப் 6 செவ்** (22-10-85) நவமி பகல் 1-14 வரை. திருவோணம்-சித்தம், பகல் 1-30 வரை. கரிநாள் விஜயதசமி. வெற்றியைக் குறிக்கும் தினமாகும். இத்தினத்தில் ஸமீவிருக்ஷ பூஜை, அம்பாளின் விஜயயாத்திரை என்பன இடம்பெறும். ராகு 3-02—4-32

**ஐப் 7 புத** (23-10-85) தசமி பகல் 1-43 வரை, அவிட்டம்-மரணம் பகல் 2-57 வரை, கேதார கௌரி விரதாரம்பம். இன்றுமுதல் 21 நாட்களுக்கு பெண்கள் கௌரிநோன்பு நோற்பர். ராகு 12-02—1-32

**ஐப் 8 வியா** (24-10-85) ஏகாதசி பகல் 2-46 வரை, சதயம்-மரணம் மாலை 4-13 வரை, ஸர்வஏகாதசி விரதம். சுபதினமன்று. ராகு 1-32—3-02

**ஐப் 9 வெள்** (25-10-85) துவாதசி மாலை 4-20 வ. பூரட்டாதி மாலை 6-20 வரை, சித்தம் பிரதோஷ விரதம். சுபகருமங்கட்கு உகந்ததல்ல. ராகு 10-33—12-03

**ஐப் 10 சனி** (26-10-85) திரயோதசி மாலை 6-18 வ. உத்தரட்டாதி-சித்தம் இரவு 8-51 வரை, சுபகருமங்களை மேற்கொள்ள நன்று. ராகு 9-03—10-33

**ஐப் 11 ஞாயி** (27-10-85) சதுர்த்தசி இரவு 8-36 வ. ரேவதி இரவு 11-39 வரை, சித்தம், சுபகருமங்கட்கு உகந்த தினம். ராகு 4-33—6-03

**ஐப் 12 திங்** (28-10-85) பூரணை மாலை 11-08 வ. அசுவினி பி.இ. 2-40 வரை, பூரணைவிரதம், சித்தம், காமேஸ்வரி பூஜை. சந்திரமண்டல பூஜை. அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 7-33—9-03

**ஐப் 13 செவ்** (29-10-85) பிரதமை பி.இ. 1-48 வ. பரணி பி.இ. 5-48 வரை, சித்தம், அசுபதினம் ராகு 3-03—4-33

**ஐப் 14 புத** (30-10-85) துவிதியை பி.இ. 4-28 வ. கார்த்திகை முழுவதும், அமிர்தம், கார்த்திகை விரதம், சுபதினமன்று. ராகு 12-03—1-33

**ஐப் 15 வியா** (31-10-85) திரிதியை முழுவதும், கார்த்திகை காலை 8-55 வரை, மரணம், சுபதினமல்ல. ராகு 1-34—3-04

**ஐப் 16 வெள்** (1-11-85) திரிதியை காலை 7-03 வ. ரோகிணி-மரணம் பகல் 11-55 வரை, நாள் நன்றல்ல. ராகு 10-34—12-04

**ஐப் 17 சனி** (2-11-85) சதுர்த்தி காலை 9-22 வரை, மிருகசீரிடம் பகல் 2-40 வரை, சித்தம், சுபதினமன்று. ராகு 9-04—1-34

**ஐப் 18 ஞாயி** (3-11-85) பஞ்சமி பகல் 11-19 வ. திருவாதிரை மாலை 5-00 வரை, சித்தம், சுபகருமங்களுக்கு உகந்த தினமன்று. ராகு 4-34—6-04

**ஐப் 19 திங்** (4-11-85) ஷஷ்டி பகல் 12-44 வரை, புனர்பூசம்-அமிர்தம் மாலை 6-50 வரை, முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 7-34—9-04

**ஐப் 20 செவ** (5-11-85) ஸப்தமி-மரணம் பகல் 1-30 வரை, பூசம் இரவு 8-00 வரை, அசுபதினம், ராகு 3-04—4-34

**ஐப் 21 புத** (6-11-85) அஷ்டமி-மரணம் பகல் 1-33 வரை, ஆயிலியம் இரவு 8-27 வரை, சுபதினமன்று. ராகு 12-05—1-35

**ஐப் 22 வியா** (7-11-85) நவமி பகல் 12-50 வரை. மகம் இரவு 8-09 வரை, அமிர்தசித்தம். அவசிய கருமங்களை பகல் 12-50ன் மேல் செய்யலாம். ராகு 1-35—3-05

**ஐப் 23 வெள்** (8-11-85) தசமி பகல் 11-21 வரை, பூரம் மாலை 6-57 வரை, சித்தம், அசுபதினம். ராகு 10-35—12-05

ஐப் 24 சனி (9-11-85) ஏகாதசி காலை 9-11 வரை. உத்தரம் மாலை 5-26 வரை. மரணம். ஸர்வ ஏகாதசி விரதம் சுபதினமன்று.
ராகு 9-06—10-36

ஐப் 25 ஞாயி (10-11-85) துவாதசி காலை 6-24 வ. திரயோதசி பி.இ. 3-10 வரை. அத்தம் பகல் 3-11 வரை, அமிர்தசித்தம், பிரதோஷ விரதம் சுபகருமங்களுக்கு நன்று. ராகு 4-36—6-06

ஐப் 26 திங் (11-11-85) சதுர்த்தசி இரவு 11-35 வரை, சித்திரை - மரணம், பகல் 12-32 வரை. தீபாவளிப் பண்டிகை இன்று புத்தாடை அணிந்து வழிபாடு, தானதருமம் முதலியவற்றை மேற்கொள்வர். ராகு 7-36—9-06

ஐப் 27 செவ் (12 11-85) அமாவாசை மாலை 7-51 வரை, சுவாதி-சித்தம் காலை 9-37 வரை, அமாவாசை விரதம், கேதாரகௌரி விரதம்.
ராகு 3-07—4-37

ஐப் 28 புத (13-11-85) பிரதமை மாலை 4.07வரை விசாகம் காலை 6-38 வரை, அனுஷம் பி.இ.3-44 வரை, சித்தாமிர்தம், ஸ்கந்தஷஷ்டி ஆரம்பம். சுபகருமங்கட்கு நன்று. ராகு 12-07—1-37

ஐப் 29 வியா (14-11-85) துவிதியை பகல்12-32வ. கேட்டை-மரணம் பி.இ. 1-05வரை, அசுபதினம். ராகு 1-37—3-07

ஐப் 30 வெள் (15-11-85) திரிதியை காலை 9-20வ. மூலம்-அமிர்தம் இரவு 10-52, சதுர்த்தி விரதம் சுபகருமங்கட்கு நன்றல்ல. ராகு 10-38—12 08

## ஸ்கந்தஷஷ்டி விரதம்

"அருதிருமருகா! அமராபதியைக் காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்" என்றெல்லாம் முருக பக்தர்கள் போற்றிக்கூறும் ஸ்கந்தப் பெருமானின் நோன்புக்குரிய தினம் ஷஷ்டி விரதம், திருக்கார்த்திகை என்பன. கார்த்திகை நட்சத்திர விசேடமும், ஷஷ்டி திதிச்சிறப்பும் பொருந்தியதாகும். மேலும் செவ்வாய் கிரகத்திற்கு சுப்பிரமணியர் அதிபதியாயிருப்பதால் செவ்வாய்க்குரிய கிழமையும் வாரவிசேடம் பெற்றுள்ளது.

தேவர்கள் இடர்தீரும் பொருட்டு முருகப் பெருமான் தேவர்களின் துன்பத்திற்குக் காரணமான சூரபத்மனை அழிப்பதற்கு அவனுடன் போர் செய்து ஆறுநாள் முடிவில் தம்து வேலாயுதத்தால் அவனுடம்பைப் பிளந்தார். பிளந்த அவனது மார்பின் இரு கூறுகளும் அவரது அருளினால் சேவலும் மயிலுமாகத் தோன்ற அவற்றை வாகனமும் கொடியுமாக ஏற்றுக் கொண்டார். சூரனாற் துயரடைந்த தேவர்கள் அவ்வாறு தினங்களும் முருகப் பெருமானைப் போற்றிப் பணிந்தனர். தேவர்கள் துயர்தீர்த்த எம்பெருமான் எமது துயரையும் தீர்க்கும் பொருட்டு அவர்க்குரிய ஆறு தினங்களும் விரதானுஷ்டானத்துடன் போற்றி பேறடைந்துள்ளனர் எம்முன்னோர்கள். ஐப்பசி மாத பூர்வபக்ஷப் பிரதமை முதல் ஷஷ்டியீறுகவுள்ள இவ்வாறு தினங்களும் உபவாசமிருந்து ஏழாம்நாள் (சப்தமியன்று) பாரணைசெய்து எம்பிரானின் ஷஷ்டி விரதத்தை மேற்கொள்ளுதல் பலனுடைத்தாகும். இத்தினங்களில் கந்தர் ஷஷ்டி கவசம், கந்தரலங்காரம், கந்தர் கலிவெண்பா போன்ற முருகன் புகழ் மாலைகளைப் பாராயணம் செய்வதும் விரதமேன்மைக்குரியதாகும். ஆறு தினங்களும் உபவாசம் மேற்கொள்ள முடியாதோர் ஐந்து நாளும் ஒரு பொழுதுண்டு ஷஷ்டியிலன்று உபவாசமிருந்து மறுநாள் பாரணை செய்வதும் ஏற்றதாகம்.

## வைரவ விரதம்

பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமும்
புனிதரு வடுகனைப் போற்றி செய்வதற்கு

உகந்த தைமாத முதற் செவ்வாய்க் கிழமை, சித்திரை மாதப் பரணி, ஐப்பசி மாதப் பரணி ஆகிய தினங்கள் உரியனவாகும். "பரணியில் தரணி ஆள்வார், பரணியடுப்புப் பாழ்போகாது" என்றெல்லாம் புகழப்படும் பரணி நக்ஷத்திரம் வைரவப் பெருமானுக்குரியதாகையால் இத்தினங்களில் பக்தர்கள் கர்மானுஷ்டானங்களை முடித்து வைரவப் பெருமானைத் தியானித்து ஒரு பொழுது பகலில் உணவருந்தி மறுநாள் இறைவணக்கத்துடன் அடியார்களுக்கு உணவளித்துப் பின் தாமுணவருந்த வேண்டும். சூரியபகவானே ஓர் சமயம் இப்பெருமானைக் குறித்து வி தமிருந்து அழிவற்ற மேலங்கியை (சட்டை) ப்பெற்றுள்ளான். எனப் புராணங்கள் நினைவூட்டுவதிலிருந்து இவ்விரதத்தின் மகிமையை உணரக் கூடியதாயிருக்கின்றது.

# உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

குரோதன ஸ்ரீ ஐப்பசி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (17-10-85 முதல் 15-11-85 வரை)

| இங் ஒக் | தமி ஐப்ப | வாரம் | துலா ம.மி. முதல் (காலை) | துலா ம.மி. வரை (காலை) | விருச்சி ம. மி. வரை (காலை) | தனுசு ம. மி. வரை (பகல்) | மகரம் ம. மி. வரை (பகல்) | கும்பம் ம. மி. வரை (பி.ப) | மீனம் மி. ம. வரை (மாலை) | மேடம் ம. மி. வரை (இரவு) | இடபம் ம. மி. வரை (இரவு) | மிதுன ம. மி. வரை (இரவு) | கடகம் ம. மி. வரை (பி.இ) | சிங்கம் ம. மி. வரை (பி.இ) | கன்னி ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 1 | வியா | 6 3 | 8 6 | 10 17 | 12 25 | 2 21 | 4 5 | 5 48 | 7 37 | 9 40 | 11 51 | 1 59 | 3 59 | 5 58 |
| 18 | 2 | வெள் | 5 58 | 8 2 | 10 13 | 12 21 | 2 17 | 4 1 | 5 44 | 7 33 | 9 36 | 11 47 | 1 55 | 3 55 | 5 54 |
| 19 | 3 | சனி | 5 55 | 7 58 | 10 9 | 12 17 | 2 13 | 3 57 | 5 40 | 7 29 | 9 32 | 11 43 | 1 51 | 3 51 | 5 50 |
| 20 | 4 | ஞாயி | 5 51 | 7 54 | 10 5 | 12 13 | 2 9 | 3 53 | 5 36 | 7 25 | 9 28 | 11 39 | 1 47 | 3 47 | 5 46 |
| 21 | 5 | திங் | 5 47 | 7 50 | 10 1 | 12 9 | 2 5 | 3 49 | 5 32 | 7 21 | 9 24 | 11 35 | 1 43 | 3 43 | 5 42 |
| 22 | 6 | செவ் | 5 43 | 7 45 | 9 56 | 12 4 | 2 00 | 3 44 | 5 27 | 7 16 | 9 19 | 11 30 | 1 38 | 3 38 | 5 37 |
| 23 | 7 | புதன் | 5 38 | 7 41 | 9 52 | 12 00 | 1 56 | 3 40 | 5 23 | 7 12 | 9 15 | 11 26 | 1 34 | 3 34 | 5 33 |
| 24 | 8 | வியா | 5 34 | 7 37 | 9 48 | 11 56 | 1 52 | 3 36 | 5 19 | 7 8 | 9 11 | 11 22 | 1 30 | 3 30 | 5 29 |
| 25 | 9 | வெள் | 5 30 | 7 33 | 9 44 | 11 52 | 1 48 | 3 32 | 5 15 | 7 4 | 9 7 | 11 18 | 1 26 | 3 26 | 5 25 |
| 26 | 10 | சனி | 5 26 | 7 29 | 9 40 | 11 48 | 1 44 | 3 28 | 5 11 | 7 00 | 9 3 | 11 14 | 1 22 | 3 22 | 5 21 |
| 27 | 11 | ஞாயி | 5 22 | 7 25 | 9 36 | 11 44 | 1 40 | 3 24 | 5 7 | 6 56 | 8 59 | 11 10 | 1 18 | 3 18 | 5 17 |
| 28 | 12 | திங் | 5 18 | 7 21 | 9 32 | 11 40 | 1 36 | 3 20 | 5 3 | 6 52 | 8 55 | 11 6 | 1 14 | 3 14 | 5 13 |
| 29 | 13 | செவ் | 5 14 | 7 17 | 9 28 | 11 36 | 1 32 | 3 16 | 4 59 | 6 48 | 8 51 | 11 2 | 1 10 | 3 10 | 5 9 |
| 30 | 14 | புதன் | 5 10 | 7 13 | 9 24 | 11 32 | 1 28 | 3 12 | 4 55 | 6 44 | 8 47 | 10 58 | 1 6 | 3 6 | 5 5 |
| 31 | 15 | வியா | 5 6 | 7 10 | 9 21 | 11 29 | 1 25 | 3 9 | 4 52 | 6 41 | 8 44 | 10 55 | 1 3 | 3 3 | 5 2 |
| 1 | 16 | வெள் | 5 3 | 7 6 | 9 17 | 11 25 | 1 21 | 3 5 | 4 48 | 6 37 | 8 40 | 10 51 | 12 59 | 2 59 | 4 58 |
| 2 | 17 | சனி | 4 59 | 7 2 | 9 13 | 11 21 | 1 17 | 3 1 | 4 44 | 6 33 | 8 36 | 10 47 | 12 55 | 2 55 | 4 54 |
| 3 | 18 | ஞாயி | 4 55 | 6 58 | 9 9 | 11 17 | 1 13 | 2 57 | 4 40 | 6 29 | 8 32 | 10 43 | 12 51 | 2 51 | 4 50 |
| 4 | 19 | திங் | 4 51 | 6 54 | 9 5 | 11 13 | 1 9 | 2 53 | 4 36 | 6 25 | 8 28 | 10 39 | 12 47 | 2 47 | 4 46 |
| 5 | 20 | செவ் | 4 47 | 6 50 | 9 1 | 11 9 | 1 5 | 2 49 | 4 32 | 6 21 | 8 24 | 10 35 | 12 43 | 2 43 | 4 42 |
| நவ 6 | 21 | புதன் | 4 43 | 6 46 | 8 57 | 11 5 | 1 1 | 2 45 | 4 28 | 6 17 | 8 20 | 10 31 | 12 39 | 2 39 | 4 38 |
| 7 | 22 | வியா | 4 39 | 6 42 | 8 53 | 11 1 | 12 57 | 2 41 | 4 24 | 6 13 | 8 16 | 10 27 | 12 35 | 2 35 | 4 34 |
| 8 | 23 | வெள் | 4 35 | 6 38 | 8 49 | 10 57 | 12 53 | 2 37 | 4 20 | 6 9 | 8 12 | 10 23 | 12 31 | 2 31 | 4 30 |
| 9 | 24 | சனி | 4 31 | 6 35 | 8 46 | 10 54 | 12 50 | 2 34 | 4 17 | 6 6 | 8 9 | 10 20 | 12 28 | 2 28 | 4 27 |
| 10 | 25 | ஞாயி | 4 28 | 6 31 | 8 42 | 10 51 | 12 46 | 2 30 | 4 13 | 6 2 | 8 5 | 10 16 | 12 24 | 2 24 | 4 23 |
| 11 | 26 | திங் | 4 24 | 6 27 | 8 38 | 10 47 | 12 42 | 2 26 | 4 9 | 5 58 | 8 1 | 10 12 | 12 20 | 2 20 | 4 19 |
| 12 | 27 | செவ் | 4 20 | 6 23 | 8 34 | 10 43 | 12 38 | 2 22 | 4 5 | 5 54 | 7 57 | 10 8 | 12 16 | 2 16 | 4 15 |
| 13 | 28 | புதன் | 4 16 | 6 20 | 8 31 | 10 40 | 12 35 | 2 19 | 4 2 | 5 51 | 7 54 | 10 5 | 12 13 | 2 13 | 4 12 |
| 14 | 29 | வியா | 4 13 | 6 16 | 8 27 | 10 36 | 12 31 | 2 15 | 3 58 | 5 47 | 7 50 | 10 1 | 12 9 | 2 9 | 4 8 |
| 15 | 30 | வெள் | 4 9 | 6 12 | 8 23 | 10 32 | 12 27 | 2 11 | 3 54 | **5 43** | **7 46** | 9 57 | 12 5 | 2 5 | 4 4 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: புரட் 30உ. (15-11-85) மாலை 6-30 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (5-43—7-46) இடபலக்னம்

# ஐப்பசி மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| | ராகு | | |
| கும்பம் | ஐப்பசி மாதக் கிரக நிலை | | கடகம் |
| மகரம்: குரு | | | சிம்மம்: குஜ |
| நெப் | சனி யூரே | சூ, புத கேது | சுக் |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரக மாற்றங்கள்

1உ (17-10-85) மாலை 6-14க்கு கன்-குஜ
10உ (26-10-85) பி.இ. 3-02க்கு விரு-புத
19உ (4-11-85) பகல் 6-52க்கு துலா-சுக்
22உ சனி அஸ்தமனம்.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புரட் | 2உ | (18-10-85) | பகல் | 3-26 | முதல் | தனுசு |
| | 4உ | (20-10-85) | மாலை | 7-04 | ,, | மகரம் |
| | 6உ | (22-10-85) | பி. இ. | 1-57 | ,, | கும்பம் |
| | 9உ | (25-10-85) | பகல் | 11-46 | ,, | மீனம் |
| | 11உ | (27-10-85) | இரவு | 11-39 | ,, | மேடம் |
| | 14உ | (30-10-85) | பகல் | 12-35 | ,, | இடபம் |
| | 16உ | (1-11-85) | பி. இ. | 1-20 | ,, | மிதுனம் |
| | 19உ | (4-11-85) | பகல் | 12-25 | ,, | கடகம் |
| | 21உ | (6-11-85) | இரவு | 8-27 | ,, | சிங்கம் |
| | 23உ | (8-11-85) | பி. இ. | 12-45 | ,, | கன்னி |
| | 25உ | (10-11-85) | பி. இ. | 1-54 | ,, | துலாம் |
| | 27உ | (12-11-85) | பி. இ. | 1-22 | ,, | விருச்சிகம் |
| | 29உ | (14-11-85) | பி. இ. | 1-05 | ,, | தனுசு |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி ஐப்பசி மீ 30 உ மாலை 6-30மணிக்கு இடப லக்னம் என அறிந்து கொண்ட பின் இடபம் என்ற கட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

### மாதபலன்

மாதம் பிறக்கும்போது துலாலக்னம் உதயமாகிறது. ஐப்பசி 1உ செவ்வாய் கன்னியில் பிரவேசிக்கிறார். இதனால் செவ்வாய் – சனி இவர்களுக்கிருந்த தீயபார்வை விலகுகிறது. ஆகையால் இம்மாதம் நாட்டில் சற்று அமைதியும், யுத்த கெடுபிடிகள் குறைந்தும் காணப்படும். விவசாயம், சமய சம்பந்தமான வைபவங்கள் முதலியவற்றில் ஆர்வம் மிகும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவாகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (ஐப்பசி மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி .02 நிமிஷம்)

| வாரம் | 6...02 7...02 | 7...02 8...02 | 8...02 9...02 | 9...02 10...02 | 10...02 11...02 | 11...02 12...02 | 12...02 1...02 | 1...02 2...02 | 2...02 3...02 | 3...02 4...02 | 4...02 5...02 | 5...02 6...02 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

யாழ். வானியற் கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு இல. 62

# ஐப்பசி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

17-10-85 — 15-11-85

| | | |
|---|---|---|
| சூரியன்:- | 17-10-85 | காலை 7-41ல் துலாராசிப் பிரவேசம். |
| | 17-10-85 | உதயம் காலை 6-02 |
| | | அஸ்தமனம் மாலை 5-50 |
| | 15-11-85 | உதயம் காலை 6-07 |
| | | அஸ்தமனம் மாலை 5-42 |
| சந்திரன்:- | 21-10-85 | பூர்வாஷ்டமி பகல் 1-24 |
| | 28-10-85 | பூரணை இரவு 11-08 |
| | 6-11-85 | அபராஷ்டமி பகல் 1-33 |
| | 12-11-85 | அமாவாசை இரவு 7-51 |
| | 13-11-85 | சந்திரதர்சனம் |

## கிரகங்கள்

புதன்: மாதாரம்பத்தில் சூர்யாஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 15 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் 8-11-85ல் சூரியனிலிருந்து கூடியதூரம் பிரிந்து 23பாகை உயரத்தில் காணப்படும். மாதமுடிவில் அதனுயரம் 22 பாகையாக இருக்கும். இக்காலங்களில் மாலையில் மேற்கு வானம் வெளித்திருந்தால் புதனை இலகுவாக அவதானிக்கமுடியும் 27-10-85ல் விருச்சிகராசியில் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாதாரம்பத்தில் சூரிய உதயம்முன் கீழ்வானத்தில் 23பாகை உயரத்தில் காணப்படுமிக்கிரகம் மாதமுடிவில் 16 பாகை உயரத்தில்காணப்படும். 4-11-85ல் துலாராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாசத் தொடக்கத்தில் சூரியஉதயம்முன் கீழ்வானில் 30பாகை உயரத்தில் தோற்றுமிக்கிரகம் மாதமுடிவில் 41பாகை உயரத்திற் காணப்படும். 17-10-85ல் கன்னிராசியிற் பிரவேசிக்கிறது.

வியாழன்: மாதாரம்பத்தில் சூரியாஸ்தமனமானதும் உச்சிக்கு 15 பாகை கிழக்கில் அதிக பிரபையுடன் காட்சியளிக்கும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சிக்கு 13பாகை மேற்கில் காணப்படும். இம்மாசம் முழுவதும் மகரராசியில் திருவோணம் 2-ம் பாதத்திலேயே சஞ்சரிக்கிறது.

சனி: மாதாரம்பத்தில் சூர்யாஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 34பாகை உயரத்தில் தோற்றுமிக்கிரகம் 7-11-85ல் மேற்கில் அஸ்தமனமடையும். 22-10-85ல் விருச்சிகராசியில் அனுஷம் 1-ம் பாதத்திற் செல்கிறது.

இந்திரன் (Uranus): மாசம் முழுவதும் விருச்சிகராசியில்கேட்டை 2-ம்பாதத்திற் சஞ்சரிக்கிறது.

வருணன் (Neptune): மாசம் முழுவதும் தனுராசியில் மூலம் 3-ம்பாதத்திற் சஞ்சரிக்கிறது.

குபேரன் (Pluto): மாசம் முழுவதும் துலாராசியில் சுவாதி 2-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

## சமாகமாதிகள்

21-10-85 மாலை சந்திரனுக்கு வடக்கு வியாழன் 5 பாகை.

30-10-85 பின்னிரவில் சனிக்குத் தெற்கு புதன் 4 பாகை. அன்று அஸ்தமனத்தின் பின் மேற்கு வானில் அவதானிக்கவும்.

3-11-85 பிற்பகல் சுக்கிரனுக்கு சித்திரை நக்ஷத்திரம் 4 பாகை. அன்று உதயம் முன் கீழ் வானில் அவதானிக்கவும்.

8-11-85 நள்ளிரவு புதனுக்குத் தெற்கு கேட்டை நக்ஷத்திரம் 2 பாகை. அன்று அஸ்தமனமானதும் மேற்கு வானில் அவதானிக்கவும்.

9-11-85 நள்ளிரவு சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 1½ பாகை.

11-11-85 மாலை சந்திரனுக்கு வடக்கில் சுக்கிரன் ½ பாகை. அன்று உதயம் முன் கீழ்வானில் அவதானிக்கவும்.

14-11-85 முற்பகல் சந்திரனுக்கு வடக்கு புதன் ½ பாகை. அஸ்தமனமானதும் அவதானிக்க.

## சந்திர கிரகணம்

28-10-85 திங்கட்கிழமை இரவு பூரண சந்திர கிரகணம் நிகழும். இலங்கையில் 9-25 மணி முதல் நடு இரவு 1-00 மணி வரை கிரகணத்தைப் பார்க்கலாம் 10-50 மணி முதல் 11-35 மணி வரை சந்திரன் பூரணமாக மறைக்கப்பட்டிருக்கும்.

**இலங்கை சோதிட ஆய்வுமன்றக் கருத்தரங்கின் தீர்மானம்**

# இவ்வருட நவராத்திரி
# எட்டு நாட்கள் மட்டுமே.

| | | | |
|---|---|---|---|
| நவராத்திரி ஆரம்பம் | புரட்டாதி | 28 | (14-10-1985) |
| மஹாநவமி | ஐப்பசி | 5 | (21-10-1985) |
| விஜயதசமி | ஐப்பசி | 6 | (22-10-1985) |


நிகழும் குரோதன ஆண்டின் நவராத்திரி நாட்கள் தொடர்பாக வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் ஆகிய இரண்டும் வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளன. புரட்டாதி 28 ஆம் திகதியே நவராத்திரி தொடங்குவதாக ஒப்புக்கொள்ளும் இவ்விரு பஞ்சாங்கங்களும் மஹாநவமி, விஜபதசமி என்பன தொடர்பான முடிவுகளில் வேறுபட்டுள்ளன. வாக்கிய பஞ்சாங்கத்தின்படி மஹாநவமியாகிய சரஸ்வதி பூஜை இறுதி நாள் ஐப்பசி 6-ம் திகதியாகும்; விஜய தசமி ஐப்பசி 7-ம் திகதியாகும். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி மஹாநவமி ஐப்பசி 5-ம் திகதியும், விஜபசதமி ஐப்பசி 6-ம் திகதியும் அமைகின்றன. ஆஸ்திகப் பெருமக்களுக்கு குழப்பம் விளைவிக்கும் இப்பிரச்சினை தொடர்பாக இலங்கைச் சோதிட ஆய்வுமன்றம் கவனம் செலுத்தித் தனது முடிவை முன்வைத்துள்ளது.

15-9-85 அன்று மாவிட்டபுர ஆதீனத்தில் நிகழ்ந்த ''சமய அனுட்டானங்களும் பஞ்சாங்கங்களும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கிலே இவ்விடயம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விஜயதசமிக்கு சாயான்ன வியாபகம் அதாவது நட்சத்திரங்கள் தோற்ற ஆரம்பிக்கும் போது (விஜயமுகூர்த்தம்) தசமி வியாபித்து நிற்றல் மிகவும் அவசியமானதாகும். அல்லது அபரான்ன வியாபகமாவது (18 முதல் 24 நாழிகை) இருத்தல் வேண்டும். வாக்கிய பஞ்சாங்கத்தின்படி ஐப்பசி ஏழாம் திகதி மாலை 5 மணி 45 நிமிடம் வரை தசமி வியாபித்துள்ளது. எனவே அப்பஞ்சாங்கம் விஜயதசமியை ஐப்பசி ஏழாம் திகதிக்குரியதாகக் கொள்கிறது. ஆயின் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி ஐப்பசி ஏழாம் திகதி பகல் 1 மணி 48 நிமிடத்துடன் தசமி அற்றுப்போகிறது. எனவே அப்பஞ்சாங்கம் முதல் நாளாகிய ஐப்பசி ஆறும் திகதியை விஜயதசமி நாளாகக் கொள்கிறது.

சோதிடத்திற்கும் சமய அனுட்டானங்கட்கும் கால நிர்ணயம் மிகவும் அடிப்படையானதாகும். கால நிர்ணயத்திற்கு வாக்கிய முறைமையைவிடத் திருக்கணித முறைமையே கணித சுத்தமான அறிவியலுக்கு இயைந்த முறைமையாகும். எனவே திருக்கணித பஞ்சாங்க முறைப்படியிலான நவராத்திரிக் கணிப்பே பொருத்தமானதாகக் கொள்ளப்படத்தக்கது என்றும் அதன்படி ஐப்பசி 5-ம் திகதி மஹா நவமியாகிய சரஸ்வதி பூஜை இறுதி நாள் எனவும் ஐப்பசி 6-ம் திகதி விஜய தசமி எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன்படி முதல் ஆறு நாட்களும் முறையே துர்க்கைக்கும், லக்ஷ்மிக்கும் அமைந்துவிட இறுதி இரு நாட்களே (ஐப்பசி 4, 5) சரஸ்வதிக்கு உரியனவாகும். இவ்விரு நாட்களிலேயே சரஸ்வதியின் மூன்று நாட்களுக்குமுரிய பூஜைகள் நிகழ்த்தப்படவேண்டும்.

| | |
|---|---|
| நா. சுப்பிரமணிய ஐயர் | சு. நடராசா |
| தலைவர் | செயலாளர் |




## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.
## 17-10-85 முதல் 15-11-85 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 7ல் லோகமூர்த்தியாகிப் பெலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நன்மை தரமாட்டாது. மேலும் சனிபகவான் அட்டமத்திலும், இராகு ஜென்மத்திலும் சஞ்சாரம் செய்வதும் தீமையானதே. செவ்வாய் 6ல் சஞ்சரிப்பது நன்மையாகும். பொதுவாக இவர்களுக்கு உடல் உளப் பாதிப்புகளுக்குள்ளாகவேண்டிய சம்பவங்கள் நிகழ்ந்தாலும் ஆச்சரியமில்லை. பொருள் வருமானமும் குன்றும். கஷ்டபலன்களே அதிகம் நிகழும். பக்தி சிரத்தையுடன் குலதெய்வவழிபாடு செய்துவருதலால் எவ்வகைத் துன்பங்களையும் வென்று சாந்திபெறலாம்.

குடும்பத்தவர்கட்குக் குடும்பநல்லுறவு பாதிப்படையும். குடும்ப வருமானம் குறைவதால் செலவு அதிகரிப்பும் கடன் பயமும் ஏற்படும். புத்திரர்களால் உதவிகள் கிடைப்பது அபூர்வம்.

வர்த்தகர்களுக்குப் பொருள்நட்டம் ஏற்படலாம். புதுமுதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. கறுப்புச்சந்தை வியாபாரிகள் பாதிப்புறுவதுடன் தண்டிக்கவும்படுவர்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் கவலைதரும். சிலருக்கு எதிர்பாராத கஷ்டப்பிரதேச இடமாற்றம் முதலியனவும் கிடைக்கும். உடன் உத்தியோகத்தர்களின் நல்லெண்ணமும் குறைவுறும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை பெரிதும் பாதிப்படையும். பசளை, மானியம், கூலியாட்கள் முதலானவற்றில் தடைதாமதங்கள் வலுவடையும். வருமானம் எவ்வகையிலும் குறைவுறுதலால் வாழ்க்கைத்தரமும் குன்றும்.

தொழிலாளர்கட்கு வேலைவாய்ப்புக்கள் பெரிதும் குறைவுறும். தொழில் பிணக்குகளும் முத

லாளிமாரின் கெடுபிடிகளும் இவர்களுக்குக் கவலை தரும்; கடன்பழு ஏறும்.

மாணவர் கல்வியூக்கம் ஏற்படினும் கல்விக் குழப்பநிலை நீடிக்கும். கல்வித்தேர்ச்சியும் திருப்தி தரமாட்டாது. ஆசிரியர்களுடன் கருத்துவேறு பாடுகளும் மாணவர் மத்தியில் அமைதியின்மை யும் ஏற்படும்.

பெண்களுக்குச் சிக்கல்கள் நிகழும் சோதனை காலமாக அமையும். விவாகமுயற்சிகள் பெரும் பாலும் தோல்வியைத் தழுவும். குடும்பப் பெண் களுக்குக் குடும்பபாரம் தாங்கமுடியாத தொல்லை தரும். மனஉறுதியும் தெய்வநம்பிக்கையுமே இவர் களுக்கு ஆறுதல்தரும்.

அதிஷ்ட நாட்கள்: அக் 19,20,24,28,29.
நவ 2,3,7,8,15.
துரதிஷ்ட நாட்கள்: அக் 17,18,26,27.
நவ 9,10,13,14.




கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம்கால்

இடபராசியில் செனனமானவர்களுக்கு சூரிய பகவான் இம்மாதம் 6ல் தாம்ரமூர்த்தியாகி மூர்த்தி பலம் குறைந்தாலும் தானபலம் பெற் றுச் சமபலத்துடன் பவனிவருதலின் நன்மை கலந்த தீயபலன்களை எதிர்பார்க்கலாம். குருபக வானின் திருஷ்டியுடன் கூடிய சுபகோசரபலன் இருத்தலின் எவ்வகைத் துன்பங்கள்வரினும் சமா ளித்தும் விடுவார்கள். இனசனபந்துக்களுக்குள் பகை விரோதசம்பவங்கள் ஏற்படும். வருமானம் அதிகரித்தாலும் அநாவசியச் செலவுகளும் ஏற்ப டவே செய்யும். சிலருக்கு வீட்டில் மங்களநிகழ்ச் சிகள்கூட இடம்பெறும்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்பத்தில் சிறுசிறு பிணக்குகள் அவ்வப்போது தோன்றி மறையும். குடும்பப் பெரியவர்களின் அன்பும் ஆதரவும் ஆறு தல் தரும். குடும்பவருமானம் திருப்திதரும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் சுமாரான லாபம் தரும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர் களுக்குப் பலவிதசோதனைகள் ஏற்படஇடமுண்டு; வங்கி முதலீடுகள் சுமாராக முன்னேற்றம்பெறும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளைத்திருப் திப்படுத்துவதில் அதிக சிரமங்கள் ஏற்படமாட் டாது. ஆனால் கீழ்உத்தியோகத்தர் விஷயங்களில் சிக்கல்கள் ஏற்படவே செய்யும். சிலருக்குக் கஷ் டத்துடன் கூடிய பதவியுயர்ச்சிகளும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தியில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படும். பண்ணை விவசாயிகள் முதலீடு செய்வதில் அதிக கவனம் தேவை. சந்தை வாய்ப்புக்கள் ஓரளவு திருப்தியளிக்கும்.

தொழிலாளர்களுக்குள் தொழில்பிணக்குகள் அவ்வப்போது தோன்றி மறையும். வேலைவாய்ப் புக்கள் ஓரளவு கிடைக்கும். வருமானப் பற்றாக் குறையை இந்த மாதமும் சமாளிக்கநேரிடும்.

மாணவர்கள் கல்வி ஊக்கம் திருப்தி தரும். கல்வி அதிகாரிகள் ஆசிரியர்கள் மாணவர்கள் நல் லுறவில் முன்னேற்றம் காணும். பரீட்சைத் தேர்ச்சிகளும் திருப்திதரும்.

பெண்களுக்குத் தடை தாமதங்களுக்கு மேல் விவாகசித்தி முதலான எண்ணங்கள் நிறைவுறும். குடும்பப் பெண்களுக்குப் பிணி பீடைகள் முத லான தொல்லைகள் இடம்பெற்றாலும் குடும்பத் தில் அமைதி குறைவுறாது.

அதிஷ்ட நாட்கள்: அக் 21,22,26,27,31.
நவ 1,5,6,9,10.
துரதிஷ்ட நாட்கள்: அக் 19,20,28,29.
நவ 11,12,15.




மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

இந்த இராசியில் செனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 5ல் சுவர்ணமூர்த்தி யாகி மூர்த்திபலம் பெற்றுத் தானபலம் குறைந் தாலும் கூடியவரை சுபபலன்களே அதிகம் நிக ழும். சனிபகவான் 6ல் பலம்பெறுவதும் இராகு லாபத்தில் சஞ்சரிப்பதும் நன்மையே. பொருள் வர வும், அந்நியர் அல்லது நீசர் உதவிகளும், மேற்கு, தென்மேற்குத் திக்குகளில் காரியஅனுகூலங்களுக் கும் இடமுண்டு. வயிற்றில்வியாதி, பெரியோர் பகைவிரோதம் பொருள்நட்டம் முதலான துர்ப்ப லன்களும் கலந்து நிகழலாம்.

குடும்பத்தவர்களுக்கு 7ம் அதிபன் அட்டமத்தில் சஞ்சாரம் செய்வதால் பிணி - பீடைகள் குடும்பத்தில் அடிக்கடி ஏற்படும். குடும்பச்செலவுகளும் அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு ஓரளவு வியாபார மந்த நிலை நீங்கும். புது முதலீடுகளைக் கூடியவரை தவிர்த்தல் நல்லது. வங்கிநிதிவசதிகள் குறையும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக்களும் கிடைக்கும். ஆனால் வேலைப்பளுவும் விண்சிரமங்களும் கூடவே தொடர்ந்து வரும். ஊழியர்களுடன் கருத்து வேறுபாடுகள் கூடஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிர் உற்பத்தி கணிசமான அளவில் முன்னேற்றம் காணும். கூலியாட்களின் பிரச்சினைகள் அதிகம் ஏற்பட இடமில்லை, ஆனால் விளைவுகளைச் சந்தைப்படுத்துவதில் தரகர் முதலியோரின் கெடுபிடிகள் இருக்கவே செய்யும்.

தொழிலாளர் மத்தியில் ஒத்துழைப்புக் கூடும். வேலைவாய்ப்புக்கள் குறைவுறும். தொழில் ஒப்பந்தங்கள் எதிர்பாராத நட்டத்தையே தரும்.

மாணவர்கள் கல்வித்தடைக்கு உரிய காரணிகளைச் சமாளிக்க நேரும். மானவர் மறதி, சோம்பல், முதலான குணங்களால் ஏமாற்றப் படுவர். பரீட்சைத்தேர்ச்சியும் எதிர்பார்த்தபடி நிகழாது.

பெண்களுக்கு - கன்னிப்பெண்களின் விவாக முயற்சிகளுக்குத் தடைதாமதங்கள் ஏற்படும். காதல் கணிப்புகள் தோல்வி அடைந்தாலும் ஆச்சரியமில்லை. குடும்பப்பெண்களுக்குக் குடும்பச்சிக்கல் சுமையாய் இருக்கும்.

அதிஷ்டநாட்கள்: அக். 23ப 24, 28, 29
நவ. 2 3 7 8 11 12

துரதிஷ்டநாட்கள்: அக். 17 18ப 21 22 31
நவ. 1 13 14



# கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

கடகராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 4ல் ரஜதமூர்த்தியாகிச் சமபலத்துடன் சஞ்சாரம் செய்கிறார். மேலும் செவ்வாய் குரு ஆகியவர்களும் சுபகோசார சஞ்சாரம் செய்வதும் நன்மையே! தேகநலம் சீராகஇருக்கும். பொருள் வரவும் திருப்தி தரும். ஆனால் சனி- கேது இவர்களின் துர்க்கோசாரத்தால் பொருள்வருமானம் குறைவுறுதலும் இனசன பந்துக்களுக்கிடையில் பகைவிரோதம் கலகம் அல்லது துக்கசம்பவங்களும் நிகழ இடமுண்டு.

குடும்பத்தவர்களுக்கு குரு 7ல் இருப்பது எவ்வகைப் பிரச்சினைகளையும் சுமுகமாகச் சமாளித்து விடுவார்கள். குடும்பவருமானம் திருப்திதரும். புத்திரர் உதவிகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறிப்பிடக்கூடிய அளவு முன்னேற்றம் காணும். எனினும் வங்கி - நிதி வசதிகள் கிடைக்கும். புது முதலீடுகள் செய்வதால் லாபம் உண்டாகும்.

உத்தியோகத்தர்களுக்கு பதவிப்பொறுப்புக்கள் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும் ஏன்சிலருக்குப் பதவிஉயர்ச்சியும் கூடக்கிடைக்கும். சிலருக்கு வசதியான இடமாற்றமும் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு கடந்தகாலங்களிலும் பார்க்கப் பயிர் உற்பத்தி முன்னேற்றம் காணும். எனினும் பயிர்அழிவும் தொடரவே செய்யும். விளைபொருட்களுக்குச் சந்தைவாய்ப்பு திருப்திதரும்.

தொழிலாளருக்குள் கருத்து வேறுபாடுகள் பெருமளவில் நீங்கும். வேலைவாய்ப்புக்களும் ஓரளவு கிடைக்கும். எவ்வாறுயினும் சீவனக்கஷ்டமே பெரும்பாலும் தொடரும்.

மாணவர்களுக்குக் கல்வி ஊக்கமும் உற்சாகமும் அதிகரிக்கும். சுயமுயற்சி மாணவர்களுக்குக் கல்வித்தேர்ச்சியும் கிடைக்கும். ஆசிரியர் மாணவர் நல்லுறவும் வளர்ச்சிகாணும்.

பெண்களுக்கு விவாகமுயற்சிகள் கைகூடிவரும். காதல் விவகாரங்களில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பப்பெண்களுக்கு களத்திரசுகமும், வீட்டில் மனநிறைவான சம்பவங்களும் ஏற்படும். வேலை செய்யும் பெண்களுக்கு அதிகாரிகளின் உதவிகள் அவ்வப்போது கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: அக். 17 18ப 26 27 31
நவ. 1 5 6ப 9 10 13 14

துரதிஷ்டநாட்கள்: அக். 19 20 23ப 24
நவ. 2 3 4மு.ப 15



# சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியில் பிறந்தவர்களுக்குச் சூரியபகவான் இந்தமாதம் 3ல் லோகமூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்வது சமபலன்களையே கொடுக்கும். பொதுவாக இவர்களுக்குப் பொருள் வருமானம் சுமாராக இருக்கும். தேகநலம் அதிகம் பாதிப்படையாது. குருபகவான் சத்துருத்தானத்தில் நீசராசியில் இருக்க இவரைச் சனிபார்வை செய்வது இவர்களுக்கு உடல் உளத்தாக்கங்களுக்குள்ளாகவேண்டியும் வரும். சிலருக்கு விபத்து - அவமிருத்து - சத்திரசிகிச்சைப் பயங்கூட ஏற்படஇடமுண்டு. தெய்வவழிபாடு துன்பசாந்தி தரும்.

குடும்பவருமானம் திருப்திதரும். புத்திரர் வழிக்கஷ்டங்களும் தொடரும். நெருங்கிய உறவினர்களுக்கிடையில் துக்கசம்பவங்கள் இடம்பெறலாம்.

வர்த்தகர்களுக்கு கடினமான சோதனைகாலமாக அமையும். கூடியவரை முதலீடுகளைத் தவிர்ப்பதால் தப்பிக்கொள்ளுவார்கள். ஊழியர்கள் விசயத்திலும் அவதானம் தேவை.

உத்தியோகத்தர்களுக்குப் பதவிகளைக் காப்பாற்றுவதற்காகப் பகீரதப்பிரயத்தனங்களைச் செய்யவேண்டியிருக்கும். இடமாற்றம் பதவியிறக்கம் முதலான நிகழ்வுகளும் ஏற்படலாம்.

விவசாயிகளுக்கு பயிர்ச்சேதம் - கூலியாட்களின் பிரச்சினைகள் தொடரும். பண்ணை விவசாயிகள் - குத்தகைப் பயிர்ச்செய்கையாளர் முதலீடுகளைக் கூடியவரை குறைப்பதால் தப்பிக்கொள்ளுவார்கள்.

தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வளரும். நாட்கூலி வேலையாட்களுக்கு சீவியம் கஷ்டம் தரும். தொழில் பிணக்குகளும் பிரச்சினைகளையே ஏற்படுத்தும்.

மாணவர் கல்வி முன்னேற்றத் தடைகளுக்குரிய காரணிகள் சங்கிலித் தொடர்போல் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடரும். எனினும் சுயமுயற்சியுடையவர்கள் கல்வித் தேர்ச்சிபெறுவர்.

பெண்களுக்கு அதுவும் கன்னிப்பெண்களுக்கு துரதிஷ்டமான காலம். காதல் முதலிய எண்ணங்களுக்குத் தோல்விகள் / அவமானங்கள் ஏற்படும். குடும்பப் பெண்களுக்குக் குடும்பப் பாரம் அதிகரிக்கும்.

அதிஷ்ட நாட்கள்: அக் 19, 20, 28, 29.
நவ 2, 3, 7, 8, 11, 12, 15.

துரதிஷ்ட நாட்கள்: அக் 21, 22, 26, 27.
நவ 4, 5, 6.



# கன்னி

உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2-ம்கால்

கன்னிராசியில் ஜெனனமானவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 2ல் தாம்ரமூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்வது நற்பலன்களை அதிகம் குறைவடையச் செய்யும். ஆனால் குரு - சனி இவர்களின் சுபகோசர சஞ்சாரம் எவ்வகைப் பிரச்சினைகளையும் சமாளித்துத் தப்பிக்கொள்ளச் செய்யலாம். தேகசுகம் பாதிப்படையமாட்டாது. குடும்பசுகம் பாதிப்படையும். பொருள் வரவு சீராக அமையும். வீட்டில் விவாகாதி சுபசந்தோச நிகழ்வுகளும் இடம்பெறும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்ப நல்லுறவு வளரும். குடும்பவருமானம் குறிப்பிடக்கூடிய அளவு அதிகரிக்கும். பெரியவர்கள் உதவிகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் சீராக நடக்கும். புது முதலீடுகளும் லாபம் தரும். நிதிவசதிகளும் சீராக இருக்கும். ஆனால் சிலர் அரசாங்க கெடுபிடிகளுக்குள்ளாகவேண்டியும் வரலாம்.

உத்தியோகத்தர்கட்கு அதிகாரிகளின் சட்டதிட்டங்களின் பிடியில் சிக்கித் தவிக்கவேண்டி இருக்கும். வருமானம் திடீர் செலவுகளால் செலவாகும். இடமாற்றங்களும் சிலருக்கு கிடைக்கும்.

விவசாயிகட்கு பயிருற்பத்திக்கு ஏற்றகாலம். பண்ணை - குத்தகைப் பயிர்ச் செய்கையாளருக்கு லாபம் கிடைக்கும். கூலியாட்கள் மற்றும் பசளை மானிய வசதிகளும் கணிசமான அளவு உதவி செய்யும்.

தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை ஏற்படும். ஆனால் வேலைவாய்ப்புக்கள் எதிர்பார்த்த அள

வில் பலன்தரமாட்டாது. பொதுவாக இவர்கள் வாழ்க்கைத்தரம் ஓரளவு முன்னேற்றமடையும்.

மாணவர் கல்வியில் ஊக்கமும் முன்னேற்றமும் அதிகரிக்கும். ஆசிரியர் - மாணவர் நல்லுறவு சீராக வளரும். கல்வித்தேர்ச்சியும் திருப்திதரும்.

பெண்களுக்கு எண்ணங்கள் மனநிறைவுடன் நிறைவுறுவதற்குச் சாதகமான காலம். குடும்பப் பெண்களுக்கு கணவன்மாரின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கும். கன்னிப் பெண்களின் விவாக முயற்சிகள் சித்திபெறும்.

அதிஷ்ட நாட்கள்: அக் 17,18,21,22,31;
நவ 1,5,9,10,13,14.

துரதிஷ்ட நாட்கள்: அக் 23,24,28,29.
நவ 6,7,8.



## துலாம்

சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3

துலாம் இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் சென்மத்தில் ரஜஸமூர்த்தியாகிச் சஞ்சரிப்பது சமபலன்களையே கொடுக்கும். பிரதான கிரகங்களான குரு சனி இராகுகேதுக்களும் துர்க்கோசாரம் செய்வதும் இவர்களுக்கு நன்மைதரமாட்டாது. உடல்நலம் அடிக்கடி பாதிப்புறும். வருமானத்திலும் செலவு அதிகரிக்கும். கடன்பாரம் முதலான தொல்லைகளும் விபத்து அவமிருத்து முதலானவையும் இவர்களுக்கு இடம் பெறலாம். சனிதசை சனிபுக்தி நிகழ்பவர்களுக்குக் கஷ்டகாலமாகவும் அமையலாம்.

குடும்பத்தில் பிணி- பீடைகள், சச்சரவுகள் அவ்வப்போது தோன்றிம்றையும். சிலருக்குக் குடும்பப் பிரிவுகள்கூட ஏற்படலாம். நெருங்கிய உறவினர்களுக்கிடையில் துக்கசம்பவங்களும் செலவுகளும் ஏற்படலாம்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் பிரதிகூலங்களையே கொடுக்கும். முன்கோபமும் அவசர நடவடிக்கைகளும் வாடிக்கையாளரைக் குறைக்கும். வங்கி- நிதிவசதிகள் பெரிதும் பாதிப்படையும்.

உத்தியோகத்தர்களுக்குச் சோதனைக்குமேல் சோதனைகாலமென நவநாயகர்கள் எச்சரிக்கின்றனர். கஷ்டப்பிரதேச இடமாற்றம், பதவியிறக்கம் முதலியனவும் சிலருக்குக் கிடைக்கும்.

விவசாயிகளுக்குப் பயிர்அழிவுகள் தொடரும். பண்ணைவிவசாயிகள் பெரிதும் பாதிப்படைவர். விளைபொருட்களுக்குச் சந்தைவாய்ப்பும் குறைவுறும். வருமானம் பெரிதும் குறைவுறும்.

தொழிலாளர் மத்தியில் அமைதிக்குறைவே அதிகரிக்கும். ஒப்பந்தத்தொழில்களைச் செய்வதில் தடைதாமதங்கள் தொடரும். நாட்கூலியாட்கள் பெரிதும் பாதிப்புறுவர்.

மாணவர் மத்தியில் அமைதியின்மையும், அலட்சியப் புத்தியும் வளரும், ஆசிரியர் - மாணவர் நல்லுறவு பெரிதும் பாதிப்புறும். கல்வித்தேர்ச்சியும் திருப்தியளிக்கமாட்டாது.

பெண்களுக்கு விவாகமுயற்சிகளில் தடை தாமதங்களே பெரும்பாலும் தொடரும். குடும்பப் பெண்களுக்கு குடும்பச்சிக்கல்கள் அமைதிக்குறைவைக்கொடுக்கும். வேலை செய்வோருக்கும் அவ்வப்போது பிரச்சினைகள் தோற்றவே செய்யும்.

அதிஷ்டநாட்கள்: அக். 19 20 23பகல் 24
நவ. 2 3 6இ 7 8 11 12 15

துரதிஷ்டநாட்கள்: அக். 25 பி.ப 26 27 31
நவ. 1 9 10



## விருச்சிகம்

விசாகம் 4ம் கால், அனுஷம், கேட்டை

விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியன் 12ல் சுவர்ணமூர்த்தியாகித் தானபலம் குறைந்தாலும் மூர்த்திபலம் பெறுகிறார். ஆனால் சென்மத்தில் சனிபகவானும் 3ல் குருபகவானும் குரூர கோசாரம் செய்வது பலக்குறைவையே கூட்டுகின்றன. பொதுவாக இவர்களுக்கு இந்தமாதமும் நற்பலன்களிலும் துர்ப்பலன்களே அதிகரிக்கும். தேகநலம் குடும்பநலம் முதலானவை அடிக்கடி பாதிப்புறும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். எந்த முயற்சிகளிலும் "கைக்கெட்டியது வாய்க்கெட்டாதபடி" யாய் நிகழ்வது சர்வசாதாரணமாய் அமையும்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்பம் பெரியசுமையாக அமையும். தாரபுத்திர சுற்றமித்திரர் ககக்

குறைவுகள், துக்கசம்பவங்கள் அடிக்கடி ஏற்படும். வருமானம் பெருமளவில் குறைவுறும்.

வியாபாரத்தில் மந்தநிலையே இந்தமாதமும் வர்த்தகர்களுக்குத் தொடரும். அவசரபுத்தியும் திடீர்நடவடிக்கைகளும் முன்கோபமும் வாடிக்கை யாளரின் வருகையைப் பெருமளவில் குறைவடை யச் செய்யும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பணிப்புரைகளை நடைமுறைப் படுத்துவதில் "கோயில் பலிக்கடா" போல் இக்கட்டான நிலைமை ஏற்படும். கஷ்டப்பிரதேச இடமாற்றம் பதவிஇறக்கம் அல்லது பதவிநீக்கம்கூடச் சிலருக்கு ஏற்படும்.

விவசாயிகளுக்கு பயிர்உற்பத்தி பூச்சிபுழுக்கள் அல்லது மிருகாதி இயற்கைப்பாதிப்புக்களால் குறைவுறும். பண்ணை விவசாயிகள் குத்தகை விவ சாயிகள் பெரிதும்பாதிப்புறுவர்.

தொழிலாளர் மத்தியில் பிணக்குகள் தோன் றும். வேலைவாய்ப்புப் பெருமளவில் குறைவுறும். தினக்கூலியாட்களுக்கு அன்றாடம் உணவுக்கே பற் றுக் குறைவு ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

மாணவர்கள் மத்தியில் மறதியும் வேறுபல உடல்பாதிப்புக்களும் கல்விமுன்னேற்றத்துக்குத் தடையாக அமையும். ஆசிரியர் - மாணவர் உற வில் முன்னேற்றம் குறைவுறும். கல்வித்தேர்ச்சி யும் திருப்திதர மாட்டாது.

பெண்களுக்குக் காதல் விவகார முயற்சிகள் கானல் நீரென நீளும். கன்னிப்பெண்கள் உணர்ச்சி வசப்படுவதால் கயவர்களால் வஞ்சிக்கப்படவும் நேரும். குடும்பப் பெண்களுக்கு வாக்குவாதங்கள் ஆபத்துக்களையும் தோன்றச் செய்துவிடலாம்.

அதிஷ்டநாட்கள்: அக். 17 18ப 21 22 26 27
நவ. 5 6ப 9 10 13 14

துரதிஷ்டநாட்கள்: அக். 28 29 30மு.ப
நவ. 2 3 11 12.



## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசுராசியில் ஜெனனமானவர்கட்கு இந்த மாதம் சூரியபகவான் 11-ல் லோகமூர்த்தியாகி மூர்த்திபலம் குறைந்தும் தானபலம் பெற்றும் சஞ்சாரம் செய்கின்றார். சனீஸ்வரனின் துர்க்கோ சாரமும் தொடரவே செய்கின்றது. பொதுவாக இவர்களின் உடல்நலம் பாதிப்படையும். பொருள் வருமானம் திருப்திதரும். இனசனபந்து மித்திர ருடன் தேவையற்ற பகை விரோதங்களும் ஏற் படும். எவ்வாறாயினும் இராசியதிபன் குரு உல் சுப கோசாரம் செய்வது இவர்களின் எவ்வகைக் கஷ்டநட்டங்களிலும் சமாளித்துத் தப்பிக்கொள்ள ஏதுவாகும்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்பாதிபன் விரை யத்தில் இருந்து குடும்பத்தானத்தைத் திருஷ்டி செய்தலின் குடும்ப வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். குடும்பசுகம் - நல்லுறவுகள் அதிகம் பாதிக்கப்படும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் மாதத்தொடக் கத்தில் லாபம் தந்தாலும் மாதஇறுதியில் லாபம் குறைவுறும். வங்கி - நிதி வசதிகளில் எதிர்பார்க் கும் முன்னேற்றம் இராது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளைத் திருப்திசெய்யப் பகீரதப் பிரயத்தனம் எடுக்க வேண்டி இருக்கும். சக ஊழியர்களின் நல்லெண் ணமும் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

விவசாயிகட்குப் பயிரழிவுக் காரணிகள் தொடரும். பண்ணை - குத்தகை விவசாயிகளுக்குக் கூலியாட்கள் பிரச்சினை கொடுப்பர். சந்தை வாய்ப்பும் குறைவுறும்.

தொழிலாளர் வருவாய்க்குமேல் செலவுகள் அதிகரிப்பால் அல்லலுறுவர். வேலைவாய்ப்புக்கள் பெருமளவில் குறையும். நாட்சம்பள வேலையாட் களுக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்படும்.

மாணவர் கல்விமுயற்சி ஆக்கமும் ஊக்கமும் தரும். கல்வித் தடைகளுக்கான காரணிகளுயர் மட்டங்களில் ஏற்பட்டாலும் சுயமுயற்சியால் சமாளித்து விடுவார்கள்.

பெண்களுக்குத் தடைதாமதங்களுக்கிடையி லும் விவாகாதி விஷயங்களில் காரியசித்தி ஏற் படும். குடும்பப் பெண்களுக்கு குடும்பத்தின் செலவு கூடினாலும் அமைதியும் அன்பும் ஆறுதல்தரும்.

அதிஷ்ட நாட்கள்: அக் 19,20,23,24,28,29.
நவ 7,8,11,12,15.

துரதிஷ்ட நாட்கள்: அக் 17,18,30,31.
நவ 1,5,6,13,14.




உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2

மகரராசியில் பிறந்தவர்கட்கு சூரியபகவான் இந்தமாதம் 10ல் சுவர்ண மூர்த்தியாகிப் பலம் பெறுவது நன்மையாகும். இராசியதிபன் லாபத்திலிருப்பதும் நன்மையே, கடந்த காலங்களில் அனுபவித்த கஷ்ட நஷ்டங்களிலிருந்து படிப்படியாகி விடுதலை பெறுவர். முன்தடைப்பட்டிருந்த காரியங்களில் சித்திபெறுவர். ஆனால் குருபகவான் இவர்களுக்குச் சென்மத்தில் சஞ்சாரம் செய்தலால் மேற்கூறிய பலன்களில் தடைகள் ஏற்படுவதுடன் உடல் உளப் பாதிப்புக்களும் பொருள் நட்டமும் ஏற்படவும் கூடும்.

குடும்பத்தவர்கட்குக் குடும்பவருமானம் கணிசமான அளவு கூடும். குடும்பப் பெரியவர்களுடன் கருத்துவேறுபாடுகளும் ஏற்படலாம் புத்திரர் வழிக் கவலையான சம்பவங்களும் இடம்பெறும்.

வர்த்தகர்களுக்குக் கடந்த காலத்திலும் பார்க்க வியாபாரம் முன்னேற்றம் காணும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகளும் இரும்பு மருந்து வகை வியாபாரிகளும் லாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்கட்கு அதிகாரிகளின் பாராட்டுக்களும் பதவியுயர்ச்சி முதலான சிறப்புக்களும் கிடைக்கும். ஆனால் கஷ்டப்பிரதேசங்களுக்குஇடமாற்றம், வேலைப் பொறுப்புக்கள் அதிகரிப்பு முதலியனவும் சிலருக்குக் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்விளைவு மகிழ்ச்சிதரும். கூலியாட்கள் தருணத்தில் உதவுவார்கள். விளைபொருட்களை சந்தைப்படுத்துதலில் தரகர் முதலியோரின் சுரண்டல்களும் இருக்கவேசெய்யும்.

தொழிலாளருக்குள் ஒற்றுமை வலுவடையும். வேலைவாய்ப்புக்களும் கிடைக்கும். நாட்கூலிவேலையாட்களின் வருமானம் ஓரளவு முன்னேறலாம்.

மாணவர் கல்வி முன்னேற்றத்துக்கு பாதகமான சூழ்நிலையே தொடரும். மாணவர் மத்தியில் வெறுப்பும் உதாசீனக்குறைவும் காணும்; கணித பொறியியற்றுறை மாணவர் கல்வித்தேர்ச்சியில் முன்னேற்றம் பெறுவர்.

பெண்களுக்கு விவாகாதி முயற்சிகளில் தடைதாமதம் ஏமாற்றங்களே தொடரும். குடும்பப் பெண்களுக்கு குடும்ப வருமானம் அதிகரிக்கும். வேலைபார்க்கும் பெண்களுக்கு நிதானமும் பொறுமையும் தேவை.

அதிஷ்ட நாட்கள்: அக் 17,21,22,26,27,31.
நவ 1,9,10,13,14.

துரதிஷ்ட நாட்கள்: அக் 18,19,20.
நவ 2,3,7,8,15.




அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3-ம் கால்

கும்பராசியில் ஜெனனமானவர்களுக்கு சூரியபகவான் இந்தமாதம் 9ல் தாம்ரமூர்த்தியாகிப் பலக்குறைவுடனேயே பவனிவருகிறார். மேலும் குருபகவான் 12லும்; சனீஸ்வரன் 10லும், செவ்வாய் அட்டமத்திலும் துர்க்கோசாரம் செய்வதும் நன்மைதரமாட்டாது. எந்த முயற்சியில் ஈடுபட்டாலும் வீண் விரையமும் தடைதாமதங்களும் அலைச்சலும் ஏற்பட்டு மன அமைதியைக் குறைக்கும். தேகநலம் - குடும்பநலம் முதலியன அதிகம் குறைவடையும். தசாபுத்தி அந்தரபெலமுள்ளவர்களுக்கு அதிகம் கஷ்டம் வராது. மற்றவர்கட்கு தெய்வபக்திதான் சாந்திதரவேண்டும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பத்தில் பிணக்குகளும் வெறுப்புக்களும் அவ்வப்போது தோன்றும். குடும்பசுகவீனம் கவலைதரும். குடும்பச் செலவு மட்டுப்படுத்த முடியாதபடி ஏறும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் ஏமாற்றம் தரும். வங்கி - நிதி வசதிகள் பெருமளவில் குறைவுறும். பங்காளிகள் / ஊழியர்கள் கூடத் துரோகிகளாவும் மாறிவிடுவார்கள்.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகரிக்கும். அடிக்கடி அதிகாரிகளின் சீற்றத்துக்குள்ளாகவேண்டி நேரும். அதிகாரிகள் / ஊழியர் / பொதுமக்களிடத்தில் அவதானமாகச்செயற்படுக.

விவசாயிகளுக்கு பயிருற்பத்திச் செலவுகள் அதிகரிக்கும். மானியம் பசளை வசதிகள் குறைவால் பயிர்விளைச்சல் பாதிக்கப்படும். கூலியாட்கள் பிரச்சினை தருவர். வருமானம் குறைவுறும்.


தொழிலாளர்மத்தியில் பிணக்குகள் அதிகரிக்கும். வேலைநீக்கம் அல்லது வேலைக்குறைவுகள் கூடச் சிலருக்கு ஏற்படும். தினக் கூலிவேலையாட்களுக்கு அன்றாட வேலைகிடைப்பதே அபூர்வம்.

மாணவர் கல்விக் குழப்பநிலையே தொடரும். எனினும் தெய்வநம்பிக்கையுடன் சுயமுயற்சி உடையவர்கள் கல்வித்தேர்ச்சி பெறுவார்கள். மாணவர் ஆசிரியர் கருத்துவேறுபாடுகளேற்படும்.

பெண்களுக்குச் சோதனையான காலம். கன்னிப் பெண்களுக்கு காதல் முயற்சிகள் தோல்வி/ஏமாற்றம் தரும். குடும்பப் பெண்களுக்கு நிதானத்துக்கும் பொறுமைக்கும் சோதனையானகாலம்.

அதிஷ்ட நாட்கள்: அக் 19,20,24,28,29.
நவ 2,3,11,12,15.

துரதிஷ்ட நாட்கள்: அக் 21,22,23.
நவ 5,6,9,10.



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் அட்டமத்தில் ரஜத மூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்கின்றார்; சூரியனுடன் கேதுவும் சேர்ந்து சஞ்சரிப்பதும், செவ்வாய் 7லும் ராகு 1லும் சஞ்சரிப்பதும் நன்மைதரமாட்டாது. ஆனால் இராசியதிபன் குரு லாபத்தில் சுபகோசாரம் செய்தலின் எவ்வகைக் கஷ்டநட்டங்களையும் சமாளித்துக்கொள்ளுவார்கள். அடிக்கடி உடல்நலக் குறைவுகள் ஏற்படும். பொருள்வருமானம் கணிசமான அளவு முன்னேறும். சிலர் நம்பிக்கை மோசடிகளுக்குள்ளாக வேண்டியும் நேரலாம்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பநல்லுறவு அதிகம் பாதிப்புறும். குடும்பசுகவீனம் அல்லது பிணக்குகளும் அடிக்கடி தொல்லைதரும். குடும்பவருமானம் திருப்திதரும். குடும்பசெலவும் கூடும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் லாபம் தரும். பவுண் வியாபாரிகள் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர். நிதிநிலைகள் சீராக இருக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். ஆனால் வேலைப்பொறுப்புக்களைச் சமாளிக்கமுடியாத நிலைமை ஏற்படமாட்டாது. கீழ்ஊழியரின் வெறுப்புக்கும் பொறுமைக்கும் உள்ளாகவேண்டியும் நேரும்.

விவசாயிகளுக்கு வேளாண்மை முன்னேற்றம் பெறும். நிதி மானியம் பசளைவசதிகள் கிடைக்கும். சந்தைவாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் திருப்தி தரும். நாட்கூலியாட்களுக்கு கணிசமான அளவு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும். வருமானம் திருப்திதரும்.

மாணவர் கல்வியூக்கம் வலுவடையும். ஆசிரியர் மாணவர் நல்லுறவு வளரும். கணித சட்டத்துறை மாணவர்கள் முன்னேற்றம் பெறுவர். பரீட்சைத் தேர்ச்சியும் பெறுவர்.

பெண்களுக்கு காதல் விவகாரங்கள் தடை தாமதங்களைச் சீர்ப்படுத்தி விவாகசித்தியையும் தரும். விவாகமுயற்சிகள் வெற்றிதரும். குடும்ப பெண்களுக்கு குடும்பசுகவீனம் ஏற்படும். வேலை செய்வோருக்கு அதிகாரிகள் துன்பம்தருவர்.

அதிஷ்ட நாட்கள்: அக் 17,21,22,26,27,31.
நவ 1,5,6,13,14.

துரதிஷ்ட நாட்கள்: அக் 23,24,25.
நவ 7,8,11,12.

## உனக்கென்ன? என்கவலை விளையாட்டு

ராகம் – தோடி 'கோப்பாய் - சிவம்'

**பல்லவி**

உனக்கென்ன என்கவலை விளையாட்டு – எந்தன்
துயரங்கள் வேதனைகள் களியாட்டு
[உனக்]

**அநுபல்லவி**

மனத்தரங் கினில்வந்தாய் மாயவினைகள் செய்தாய்
அனைத்தையும் நடத்திவிட்டே ஆனந்தமாய் ரசித்தாய்
[உனக்]

**சரணம்**

கண்ணீர் துடைக்க வராய் கடுமொழி தடுக்கவராய்
புண்ணான என்இதயம் பூரிக்க வகைகள் சொல்லாய்
அன்னையுன் இதயத்திலே அடியேனுக் கருள்இல்லையேல்
அன்னையென் றேயுனக்கோர் அருமந்த பேரெதற்கோ?
[உனக்]

# கோட்சாரத்தில் சனீஸ்வரன்

ஆ. விநாயகமூர்த்தி — புலோலி

கோள் என்பது கிரகம். சாரம் என்பது சஞ்சரிப்பது. கோள் + சாரம் =கோட்சாரம் ஆகும். கோசாரம் என்பது தவறு. சந்திரன் நின்றராசியை வைத்து கிரகசஞ்சாரங்களைக் கணிப்பது சந்திர கோட்சாரம் எனப்படும். இங்கு சனீஸ்வரன் சந்திர கோட்சாரப்பலனை ஆராய்வோம்.

பாபக்கிரகங்கள் 3,6,11-ம் வீட்டில் சுபப்லன் தருவாரிகள் என்பது சோதிடசாஸ்திர விதி. செவ்வாய், சனி, ராகு, கேது, சூரியன் என்பன பாபக் கிரகங்களாகக் கருதப்படுகின்றன. இக்கிரகங்கள் சந்திர லக்கினங்களுக்கு 3,6,11ல் இருப்பதும், கோட்சாரத்தில் இருதானங்களை அடைவதும் சுப பலனும். சனீஸ்வரனுர் 12 இராசிகளையும் வலம் வருவதற்கு முப்பது ஆண்டுகள் செல்கிறது. இவர் ஒரு ராசியில் சஞ்சரிக்கும் காலம் 2½ வருடங்களாகும். சந்திரன் இருந்த ராசியின் முதல் ராசிக்கு சனீஸ்வரன் பிரவேசிக்கும் காலம் 7½ச்சனி ஆரம்பமாகக் கருதப்படுகிறது. சந்திரராசியில் பிரவேசிக்கும் காலம்தொட்டு 2½ ஆண்டுகளை நடுக்கூறு எனவும், சந்திரராசியின் மறுராசியில் பிரவேசிக்கும் காலம் முதல் 2½ ஆண்டுகாலத்தை கடைக்கூறு எனவும் கருதுவர். சந்திரன் நின்ற ராசி முதல் ராசியாக எண்ணும்போது 8-ம் ராசியாக வரும் வீட்டை சனீஸ்வரக்கிரகம் அடையும்போது அட்டமத்துச்சனி ஆரம்பமாகும். அவ்விராசி விலகும்போது 9-ம் வீட்டை அடையும். அவ்வெட்டாம் ராசியில் சனீஸ்வரன் இருக்கும் 2½ வருடம் அட்டமத்துச்சனி எனப்படும். பொதுப்பலனுக சோதிட சஞ்சிகைகள், பத்திரிகைகள் கூறுவதை மனதிற் கொண்டும், நம் முன்னோர்களால் இயற்றப்பட்ட சோதிட நூல்களிற் கூறப்பட்டவைகளை மனதிற்கொண்டும் நம் பொதுக் கருத்தைக்கூறுவது சோதிடபலாபலனுகாது. இதற்கு சிறப்பான ஆய்வு மிகவும் வேண்டும். இதிற்சில முரண்பாடுகளைக் கண்டு அதனை உணரவைப்பதற்கு இதன் மூலம் முயற்சிக்கின்றேன்.

ஆயுட்காரகன் எனப்படும் சனீஸ்வரன், மந்தன், காரி, முடவன், கதிர்மகன், நோய்முகன், காகவாகனன், எனப்பல நாமங்களையுடையவர். அவர்பார்வை கொடியது என்பதனுல் கண்ணைக் கட்டிக்கொண்டிருப்பதாகக் கருதுகின்றனர். லக்கினுதிபன் ஆயினும், யோகாதிபன் ஆயினும் அவர் பார்வை விஷேடபலனல்ல என்பது அனுபவக் கருத்தாகும். 3,6,11-ம் வீட்டில், ஆட்சி உச்சம் நட்புராசியில் இவர் இருக்கும்போது நற்பலன் நல்குவார் என்பது பொதுவான கருத்து. 7½,8, சனி நிகழுங் காலம் அதிக தீங்குடையது என்பதும் பொதுக்கருத்தேயாகும்.

மகர, கும்ப லக்கினகாரர்களுக்கு லக்கினுதிபனுகவும், இடபலக்கினகாரர்களுக்கு தருமகருமாதிபனுய் யோககாரகனுகவும், துலாலக்கினகாரருக்கு யோகக் கிரகமாகவும் அமையும் சனீஸ்வரன், மேற்குறிப்பிட்ட மகர, குப்ப, இடப, துலா லக்கினகாரருக்கு 11-ம் இடம் நீங்கலாக 3ம், 6ம் வீட்டில் இருப்பதைவிட கேந்திர திரிகோண 11-ம் வீட்டில் இருப்பதும், ஆட்சி உச்சமாக இருப்பதும் சுபக்கிரக பார்வை அடைந்திருப்பதும் உத்தம பலன்களாகும். இவ்வாறு கும்பலக்கினகாரருக்கு 3-ம் வீடான மேடத்தில் நீசமடையும் சனீஸ்வரன் நீசபங்கமடையாவிடின் துர்ப்பலனே நல்குவார் என்பது கவனிக்கத்தக்கது. நித்திய சுபன் எனப்படும் லக்கினுதிபன் 3-ம், 6-ம் வீட்டை அடைவதும் யோககாரகன் துர்த்தானங்களில் இருப்பதும் நற்பலனுக்குரியதன்று. இதுபோன்று ஒவ்வொரு கிரகத்திற்கும் ஆதிபத்திய, இருப்பு நிலைமை ஆராயப்பட வேண்டும்.

மகர லக்கினகாரருக்கு, 2-ம் அதிபனுய் 7-ம் வீட்டில் இருப்பது தோஷம் என்னும் கருத்தும் உண்டு. 7-ம் மாரக அதிபனுகி இருக்கும் சனீஸ்வரன் தனது தசா, புத்தி, அந்தர காலங்களிலும், துர்க்கோட்சாரக் காலத்திலும் தீங்கான பலனை நல்குவார் என சோதிடர் கூறலாம். ஆனல் லக்கினுதிபன் சனீஸ்வரன் 7-ல் திக்குப் பலம் பெறும்போது சுபக்கிரக பார்வையும் உண்டாயின் திருஷ்டி பலமும் பெற்று நற்பலனைச் செய்குவார்; அதில் சந்திரன் குருவும் இருப்பின் உச்சக்குரு, ஆட்சிச்சந்திரன் என்பவற்றுடன் சனீஸ்வரனும் வலுப்பெற்று நற்பலன் உண்டா

கும். துர்ராதிபத்திய கெடுதலும் குரு சந்திர னுக்கு இயலாதொழியும். இச்சாதகர்கட்கு சனீஸ்வரனின் கோட்சாரத் தீங்கும் எதிர்பார்க் கும் தாக்கத்தைத் தராது. தெசாபுக்தி, அந்தர காலத்திலும் சனீஸ்வரன் நற்பலனே நல்குவார். இது போலவே மேடத்தில் சனி நீசமுற்றாலும் செவ்வாய், சூரியன் அவ்விராசியிலிருந்து சனி சங்கமமானால் சனீஸ்வரன் நற்பலனையே நல்குவர். சிங்க லக்கினமாயின் மிக விஷேடம்.

பாபக் கிரகங்கள் கேந்திர திரிகோணங்களில் இருப்பது நன்றல்ல என்பது லக்கினாதிபனுக்கும், யோகக் கிரகங்களுக்கும் பொருந்தாத கூற்றாகும். அதுபோல கேந்திராதிபதி திரிகோணத்தும், திரி கோணாதிபதி கேந்திரத்தும் இருப்பது யோகபலன் என்பது என்பது இப்பாபக் கோட்பாடுகளுக்கும் பொருந்தும். இக்கருத்துப்படி சனீஸ்வரன் கேந் திராதிபத்தியம் பெற்று திரிகோணத்திலும், திரி கோணாதிபத்தியம் பெற்று கேந்திரத்திலும் இருப் பது யோக பலனாகும்.

### சச யோகம்

சனீஸ்வரன் கேந்திரங்களில் [1.4,7,10] ஆட்சி உச்சமாக அமரின் சசயோகம் எனப்படும். இது சந்திர லக்கினத்திற்கும் பொருந்தும். நல்லாதி பத்தியம் பெற்றுள்ள சனி கேந்திரத்தானத்தில் ஆட்சி உச்சமாக இருப்பது. இவ்யோக பலனும் ஆதிபத்தியம் தீதாயினும் ஆட்சி உச்சமாக கேந் திரத்தில் இருப்பினும் இவ்யோகம் உண்டாம்.

பாபக்கிரகங்களில் ஒன்றாகிய சனீஸ்வரன் மகர, கும்ப, இடப, துலா லக்கினகாரருக்கு சச யோக முடையதாயமையின் விசேட பலனைக் குறிப்பிட வேண்டும். இவ்வாறமைந்துள்ள சனீஸ்வரன் கோட்சாரத்தில் 3, 6, 11-ம் இடம் மேவும்போது அதி உன்னத பலனைக் கொடுக்கும். இவ்யோகச் சனி 7½, அட்டம காலங்களில் மேற் குறிப்பிட்ட சசயோக, யோகக் கிரகமாகையால் தீயபலனைக் கொடுக்காது என்பதும் கவனிக்கத் தக்கது. மகர, கும்ப, துலா ராசிகள் 7-ம் வீட்டுத் தோஷமோ ஆதிபத்திய தோஷமோ ஏற்படும் எனக் கூறுவது பொருத்தமல்ல. மாறாக நற் பலனை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும்.

கிரகங்கள், ஆட்சி, உச்ச ராசிகளில் அமைந்து சனியும் பலவானாய், நல்லாதிபத்தியராய் ஆட்சி, உச்சமாக கேந்திர கோணங்களில் லாபத்தில் அமர அச்சாதகருக்கு 7½ சனி, அட்டமத்துச் சனி நிக ழும்போது சாதகருக்கும், அவரைச் சார்ந்தவர் கட்கும் நற்பலனாய் விவாகம் நிகழ்தல், வெளி யூர்ப் பிரயாணம், பொருள்வரவு, தொழிற்சித்தி போன்ற சுபபலன்கள் நிகழ்வதை அவதானிக்க லாம். பெரும்பாலும் அனேகருக்கு 7½ சனி நிக ழும்போதே திருமண வைபவம் நிகழ்கின்றது. வேறு தோஷங்களால் திருமணத்தடை ஏற்பட்ட பலர் 7½ சனி நிகழ்கையிலேயே திருமணம் செய் கின்றனர். எனவே 7½ சனி, அட்டமத்துச் சனி, என்றவுடன் மனந் தளர்வுற்று ஏங்கித் தவிக்கும் பலர் தமது சொந்தச் சாதக பலனை நுணுகி ஆராய்தல் மூலம் சனீஸ்வரனின் தன்மையை அறிந்து கவலையை மறக்கக் கடவர். சனீஸ்வரன் எல்லா சாதகர்கட்கும் தீங்கினைச் செய்பவரல்லர் என்பதை இதனால் உணர்வீர்களாக. தீங்கினைச் செய்யும் நிலையினரும் கிரகசாந்தி செய்து எள் எண்ணெய் எரித்து எள்சாதம் நிவேதித்து நீலப் பூ அர்ச்சித்து சாந்தி பெற்றுய்வார்களாக.

## தாயே! தயை புரி!

ந. சு. வதனி - பருத்தித்துறை

எங்கு தேடியும் காணேன் உன்னை
என் நெஞ்சினில் கண்டேனம்மா
வந்த வினைகளை விரட்டி அழித்து
வாழ்வு தந்தாய் சாமுண்டியே!

பாவம் நீக்கினாய் பழவினை நீக்கினாய் - உன
பாதம் தொழுதிட அருளும் தந்தாய்
காலன் எதிர்க்கையில் மறவாது - உன்
நாமம் நினைத்திட வழியும் செய்வாய்.

இன்பம் நிறைந்த இனிய உணர்வுடன்
நெஞ்சம் நெகிழ்ந்திட உனை நினைப்பேன்
எஞ்சும் உயிரினில் அழியாது நிற்கும்
விஞ்சும் கல்வியை எனக் களிப்பாய்.

ஆணவம் நீங்கிட அறுபழி தீர்ந்திட
அன்னை நீயே வர மருள்வாய்
தோல்விப் படிகளில் ஏறி அடையும் - பெரு
வெற்றிக் களிப்பினை எனக் களிப்பாய்.

சாமுண் டியே! சங்கரியே! — நீ
எட்டி உதைக்கினும் எனக்கினி கதியிலை
மஞ்சு பாசினி மாலினியே!
தஞ்சம் அடைந்தேன் தயை புரி தாயே!

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## எண் - 8 சனீஸ்வரன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

எண் 80; பாவகாரியங்களைச் செய்து பிறரிடமிருந்து பணம் பறிக்கும் இடமாயும், மொத்த வியாபார இடம் அல்லது பூட்டிவைக்கும் இடம் போலவும் காணப்படுகின்றது. எப்பொழுது ஆபத்து வரும் ஆபத்து வரும் என மனதினில் ஏங்கியபடி இருப்பார்கள். ஆனால் வெளியில் பகட்டாகக் காணப்படுவர். எப்படியாவது பணம் சேர்த்துவிடத் துடிப்பர். பணம் வந்துபோய்க் கொண்டிருக்கும். குறுக்கு வழியில் குபேரராகத் திட்டம் தீட்டுவார்கள். நோய்களும் மருந்துகளுமாக இருக்கும். பேருக்கு ஊருக்கு மனைவி, மக்கள் என்றிருக்கும். நிலையற்ற வாழ்வு ஏற்படும். பரபரப்பான குடும்ப வாழ்வு வாழ்வர். தெய்வ சக்தி - சித்தி ஏற்படும். எதையும் துணிவுடன் செயற்படுத்துவர்.

எண் 89: ''காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா'' என்றிருப்பர். இவர்களின் ஊக்கத்திற்குத் தகுந்தாற் போல் பொருள் பெருகும். பூமியால் விளையும் பொருட்கள் விற்பனைத் தொடர்பில் அதிக பொருளீட்டலாம். (உ-ம்: நெல், மிளகாய், வெங்காயம், உழுந்து) படிப்படியாக உயர்ந்து வருவர். இந்த அமைப்பில் உள்ளவர்கள் எதையும் ஒழிக்க முடியாது. இவர்கள் செய்யும் செயல்களைப் பிறர் தெரிந்தும் இவர்களை நாடி ஓடிவரும் வசீகரசக்தி இவர்களிடம் இருக்கும். முறையான கல்வியால் பெரும் பதவிகள் கிடைக்கும். மருத்துவத்துறையில் பெரும் பொருளை அடைவர்.

எண் 98: காலத்தின் கோலத்திற்குத் தகுந்தாற்போல் செயற்படும் அறிவாளிகள் இவரிடம் கதைப்பதால் மற்றவர்கள் அதிக அறிவு பெறுவர். பேராசிரியர்கள் போன்றும், உயர் பதவிகளை ஆதரிப்பவர்களாகவும், தெய்வபக்தி உடையவர்களாகவும், புனிதமானவர்களாகவும் காணப்படுகின்றார்கள். எக்கஷ்டம் வந்தாலும் மனத்திருப்தியுடன் ஏற்றுக்கொள்வார்கள். தெய்வபக்தியுடன் அமைதியான வாழ்வு வாழ்வர்.

எண் 107: சுயகௌரவம், தன்மானம், இடைவிடாத போராட்டத்தைக் கொடுக்கும். யார் எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொண்டு விடுவார்கள். தாம் ஏமாற்றப்பட்டதெனத் தெரிந்தால் கொதித்தெழுந்து போராடுவார்கள். மத்தளம் போன்று தமக்குத் தெரிந்ததைப் பிறருக்கு சொல்லிச் சொல்லி ஆறுதலடைவார்கள். இறுதியில் அநாதைகள் போன்று காலம் கழிப்பார்கள். வெளிநாடுகளில் பெரும் பொறுப்பான பதவிகளில் இருப்பர். வெளித்தொடர்பு சிறப்பைத் தரும்.

10, 19, 37, 46, 64, 73, 23, 32, 41, 50 என்னும் எண்களில் தொழிலின் பெயர், தொழிலிடத்து எண்கள் அமைந்தால் மிகச் சிறப்படைவார்கள்.

(இ) எட்டாம் (8) எண்ணைக் குறிக்கும் எழுத்துக்களும் அவைகளின் பலன்களும்!

F - கருநீல நிறம். கண்டிப்புடன் கூடிய அறிவுரை, அடித்து அணைக்கும் சுபாவம் ஏற்படும். மனோசக்தி, வசீகரசக்தி பெருகும். ஜன வசீகரத்தையும் அதிகரிக்கும். தனது தொழில், திடமான நிலை ஏற்படும். தமது சக்தியை, நேரத்தைப் பிறருக்காக் செலவு செய்வர். இரும்பு, மருந்து, பாட்ஸ் கடைகள், மின்சார உபகரணங்கள் விற்பனை, நீர், நெருப்பு சம்பந்தமான தொழில்கள், கறுப்பு மார்க்கட் என்பன செய்வதால் அதிக பொருளீட்டலாம். துணிவுடன் தலைமை தாங்கி செயல்புரியும் தன்மையினர். மேலதிகாரிகளையும் அதட்டி மிரட்டுவர்.

P-1 கறுப்பு நிறம். போராட்டம் நிறைந்தது. ஆழ்ந்த அறிவு அனுபவத்தைப் பெருக்கும் எழுத்தாகும். பிறருக்கு உதவுவதில் முன்னிற்பார்கள். குடும்ப வாழ்வில் மாறுபட்ட கருத்துள்ள மனைவியால் சோதனை, வேதனை அடைவார்கள். சகோதர பாசம் நிறைந்தது. தவறான செயலால் விதி வசப்பட்ட பலன்களை அடைவர். வெளிநாட்டு தொடர்பான ஏற்றுமதி இறக்குமதி கடல் சம்பந்தமான தொழில் இரசாயனத்தொடர்பான வியாபாரம் தெய்வசம்பந்தமான காரியம் என்பன மனகௌரவம் பராசக்தியின் அருளையும் தரும். வாக்குச்சக்தி, அருட்சக்தி பெருகும். வாக்குச்சக்தியால் பொருள் சேர்ப்பர்.

## (ஈ) பிறப்பு எண்ணும் கூட்டு ஒற்றை எண்களுக்குமுள்ள பலன்கள்

**8 - 1 :-** அரசாங்கத்தில் பதவிவகிப்பர். அரசியலில் நாட்டம் இருக்கும். அடிக்கடி தொழிலை மாற்றுமல் பங்கு வியாபாரம், கமிசன் தரகு சம்பந்தமான முறையில் அதிகப் பொருட்களை ஈட்டிக் கொள்ளலாம். இவர்களுக்கு தலை சம்பந்தமான வியாதிகள் அடிக்கடி ஏற்படும். தலையிடி, பித்த மயக்கம் ஏற்பட இடமுண்டு. மலச்சிக்கலை பழவகை சாப்பிட்டுப் போக்கிக் கொள்வது முக்கியமாகும். தெய்வபக்தியுடன் இருந்தால் நற்பலன்கள் அதிகரிக்கும்.

**8—2 :-** இவர்கள் சலன மனோநிலை உடையவர்கள். எத்தொழிலிலும் நிலைத்து நிற்கமாட்டார்கள். அரசாங்கத்தில் சிறுதொழில்களை கூலித்தொழில்களை உடையவர்களாகக் காணப்படுகின்றனர்கள். இவர்களுடைய சுபாவம் ஒருவருக்கு ஒருவர் சண்டையை மூட்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதாகும். சந்தேகம் பிடித்தவர்கள். அடிக்கடி ஏதாவது குறைகுற்றங்கள் சொல்லியபடி இருப்பர். தம்து குறைகுற்றங்களை மறைக்கத் தெய்வத்தையும் சாஸ்த்திரங்களையும் கேவலமாகப் பேசுவர். மனைவியால் தொல்லைகளோ அல்லது வியாதியுள்ளவர்களாகவோ இருக்கும் இவர்கள் தாம் தேடும் பொருட்களை விரயம் செய்தபடி இருப்பர். இவர்கள் அடிக்கடி சளி, நரம்பு வியாதிகளால் வருந்துவர்.

# துலா லக்ன ஆணும் மிதுன லக்னப் பெண்ணும்

## சேர்வது நன்மையானதா?

திரு. வே. சின்னத்துரை — நல்லூரர்

இருவரும் வாயு தத்துவமுடையோராதவால் உணர்ச்சிகளாலும், அறிவாலும் ஒருவித மனப் பாங்குடையோராயிருப்பார்கள். இரு கூட்டாளிகளும் சமவலிவுடையோராதலின் அவர்கள் வீட்டில் இலட்சிய சூழல் ஏற்பட வேண்டும். இருவரின் சொந்த சுதந்திரம் பங்கிடப்படுகிறது. ஜன்சமூக வாழ்க்கையும் அடிக்கடி தேவைப்படும் மாற்றங்களும் அப்படிப் பங்கிடப்படுகிறது. அவளிலும் பார்க்க கூடுதலாக தன் சொந்த வாழ்க்கையையே அவர் விரும்புவார். ஆகையால் அவள் அவர்தன்னில் சாராது சுதந்திரமாயிருக்க தன்சுயமாக ஒத்துழைப்பு நல்கவேண்டும். வீட்டு வேலைகளைச் செய்வதற்கு அவனுக்கு விருப்பவீனமாகவிருந்தால் அவள் அவனை நச்சரிப்பாள். அது அவனை வெளியேறச் செய்யும். அவளுடைய சிறுபிள்ளைத்தனங்கள் இது பெண்மையல்ல என்று அவர் அவளுடைய பாதுகாப்பை நிராகரிப்பார். இது பொருமையால் உண்டாவது — இது கட்டுக்கடங்காவிடில் அவனுடைய இரக்கத்தைப் பெற மாட்டாள். ஆனல் கூடிய காலம்வரை அவர்களுடைய உறவு சிறப்பாகவேயிருக்கும். ஏனெனில் எந்த உறவும் அடிக்கடி செயற்பட வேண்டும். மனப்பான்மை இருவருக்கும் உண்டாதலால்.

துலாகாரர் மிகவும் மோகமுடையவர். அவருடைய மனவிருப்பத்திற்கு தக்கவாறு அவர் சாந்திப்படுத்துவார். அவளை ஊடுவதில் அவர் என்றுமே தணியமாட்டார். ஆசை வார்த்தைகளை அள்ளி அளவாது சொரிவதில் அவள்மேல் இன்புறுவார். இச்செயல் பெண்களை வலுவாகக் கவர்ந்துவிடும். இவரை அவள் காதல் மன்னன் என்று வர்ணிப்பாள். ஆகையால் வாழ்க்கை ஒரே உல்லாசம்தான். இது ஒருகாலமும் மந்தமாக இராது.

இது நல்ல ஒரு ஐக்கியம்.

விரைவில் எதிர்பாருங்கள்!

**1986-ம் வருட திருக்கணித கலண்டர் டயறிகள்**

அன்னையைக் கண்டேன் - 33

— ஆனந்தபைரவி

# செந்நெல் வளங்காக்கும் சேற்றுக்கண்டி மாரியம்மன்

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள இரண்டு அம்மன் கோயில்களைப் பற்றி ஏற்கெனவே எழுதியிருந்தோம். இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயம், ஐயந்திநகர் மீனாக்ஷி அம்மன் ஆலயம் என்பனவே அவை.

இவற்றைவிட இன்னும் இரண்டு பிரபலமானதும், புராதனமானதுமான அம்மன் ஆலயங்கள் கரைச்சிப் பகுதியிலே இருக்கின்றன என்று இங்கு வந்தவுடனேயே கேள்விப்பட்டிருந்தோம். என்றாலும் அவற்றின் தொலைவுகாரணமாகவும், பிரயாணவசதிக் குறைவுகள் காரணமாகவும் அங்கு போகும் நாள் தாமதமாகி வந்தது.

ஈற்றில், முரசுமோட்டை சேற்றுக்கண்டி அம்பிகையின் அழைப்புக் கடந்த ஆனிமாதத்தில் எமக்குக் கிடைத்தது. அன்னை முத்துமாரிக்கு முதன்முதலாக த்வஜாரோகணமாகி, மகோற்சவம் நடக்கும்வேளை கலந்துகொள்ள வருமாறு வந்த அழைப்பை ஏற்று அவளைத் தரிசிக்கச் சென்றிருந்தோம்.

திருவிழாச் சந்தடிகள் ஓய்ந்ததும் கடந்த மாதத்தில் நல்ல ஒருநாளிலே மறுபடி அவளைத் தரிசிக்கச் சென்றிருந்தோம். அப்போது அன்னையின் புராதனவரலாறுகளைக் கேட்டு மகிழ்ந்தோம்.

சுற்றுமதில் இன்னும் அமைக்கப்படவில்லை. வேலிகட்டியிருக்கிறார்கள். வசந்தமண்டபம், யாகம் என்பனகூட இன்னும் உருவாகவில்லை. அப்படியிருந்தும் ஆர்வத்தின் மிகுதியால் தற்காலிகமாக அவற்றை அமைத்து மஹோற்சவத்தையே நடத்திமுடித்த அடியார்கள் பாராட்டுக்குரியவர்கள்.

கொடித்தம்பம் உலோகஅங்கி போடப்படாமல் மரத்திலே அமைந்துள்ளது. சிம்மம், பலிபீடம் என்பனவும் பிள்ளையார், நாகதம்பிரான், பாலசுப்பிரமணியர், வைரவர் என்பவற்றின் சந்நிதானங்களும் அமைந்துள்ளன. ஸ்நபன மண்டபத்தின் வாயு மூலையில் உக்கிரபைரவர் தனியே சூலவடிவில் காட்சியளிக்கிறார்.

வெளிவீதியிலே ஈசானத்திலே ஐந்து முகம் கொண்ட சூலவடிவிலே புதுமையான விக்கிரகம் ஒன்று தனிச்சந்நிதானத்திலே வைத்து வழிபடப்படுகிறது. பின்புறத்தில் அழகிய தாமரைக்குளம் ஒன்று காணப்படுகிறது. இங்குதான் தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது.

ஆலயத்தின் ஸ்நபனமண்டபத் தூண்களிலும் விதானத்திலும் அழகிய சித்திரவேலைப்பாடுகள் அமைந்துள்ளன. வாசலின் இருபுறமும் பெரிய அளவில் இரு துவாரபாலகிகள் காட்சி தருகிறார்கள். மூலஸ்தானத்திலே அமர்ந்த கோலத்தில் முத்துமாரி அம்மன் அருள் பாலிக்கிறாள்.

நீண்ட காலம் உற்சவத்திற்குப் பயன்படுத்தி வரும் நின்ற கோலத்திலமைந்த மாரியம்மன் உற்சவ மூர்த்தியொன்று அற்புதமான அழகு பொலிகிறது. அதைவிட அண்மைக் காலத்தில் செய்யப்பட்ட இருந்த கோலத்திலான உற்சவ மூர்த்தியும், திருஞானசம்பந்தர் விக்கிரகமும் காணப்படுகின்றன.

ஆலயமும் அதன் சூழலும் தூய்மை, அழகு, எளிமை என்ற மூன்றும் துலங்கும் சிறப்பு பிரமிக்கும் வகையில் உள்ளது. சுற்றிலும் மருத நிலம் சூழ்ந்த இடம்.

கிளிநொச்சி - இரணைமடு பிரதான வீதியையும், பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியையும் இணைத்து நிற்கும் வீதியிலிருந்து ஹில்றோட் என்ற ஒரு சிறுவீதி பிரிகிறது. அதன் வழியிலே சென்றால் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் வீதியிலிருந்து சற்று உள்நோக்கிக் காணப்படுகிறது இந்த ஆலயம்.

ஆலயத்தின் துப்பரவுக்கு ஊர் மக்களின் சிரமதான நடவடிக்கைகள் நன்கு உதவுகின்றன. இந்துமாமன்றம் என்ற அமைப்பு தண்ணீர்ப் பந்தல் அமைத்தல், பிடிஅரிசித் திட்டம் மூலம் அன்னதானமும் வேறு பல சேவைகளும் செய்தல், குருபூஜைகளை நடத்துதல் என்பவற்றைப் பொறுப்புடன் செய்து வருகிறது. 'லைற் மெசின்', 'ஒலி பெருக்கி' என்பன இவர்களது விடாமுயற்சியால் பொருத்தப்பட்டுள்ளன.

தினசரி மூன்று காலப் பூஜையும் வெள்ளிக் கிழமைகளில் விசேட பூஜை என்பன நடைபெறு

கின்றன. பௌர்ணமி தினங்களில் உருத்திரா அபிஷேகம், விசேட பூஜை என்பன நடைபெறு கின்றன.

சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன் கொடிகாமம், மீசாலை முதலிய இடங்களிலிருந்து வந்த பலர் புளியம்பொக்கணை, முரசுமோட்டை முதலிய இடங்களில் குடியேறி இருந்தனர். பழைய கமம் என்று இப்பகுதிகளைக் கூறுவர்.

பழைய கமத்தில் வசித்து வந்தவர்கள் இப்போது அன்னையின் ஆலயம் இருக்குமிடத்தில் மாடு மேய்ப்பதுண்டு. வேம்பு, வில்லை முதலிய மரங்கள் இங்கிருந்தன. அவற்றின் கீழ் வீரபத்திரர் வழிபாடு, கலையாடுதல், பொங்கல் வைத்தல் என்பன நடந்து வந்தன.

1950 ஆம் ஆண்டின் பின் இந்தப் பகுதியில் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு சிறிய கொட்டில் இந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு சிறிய கொட்டில் இந்த இடத்தில் அமைக்கப்பட்டு அம்பாள், வீரபத்திரர் வழிபடப்பட்டு வந்தன. அக்காலத்தில் பழைய கமத்தினருக்கும் புதிய கமத்தினருக்குமிடையில் இவ்வாலய வழிபாடு சம்பந்தமாக போட்டிகளும் ஏற்படுவதுண்டு.

முன்பு இங்கு பொங்கற் பொருட்களை எடுத்து வருதலைப் பண்டம் தூக்குதல் என்று சொல்வர். இப்படி ஒரு பொங்கலின்போது பண்டம் தூக்குபவர்கள் குடிவெறியுடன் தந்ததால் பொங்கல் முடிந்த மறுநாளில் எல்லாப் பனை மரங்களிலும் கள்ளு துர்நாற்றம் வீசத் தொடங்கியது. தவறு இழைத்தவர்கள் அன்னையை வழிபட்டு மன்னிப்புக் கோரினார்கள்.

1969 இல் இங்கு முதன்முதலாக மடாலயம் ஒன்று அமைக்கப்பட்டது. நின்ற கோலத்தில் இங்கு காணப்படும் தாம்ர விக்கிரகமே முதலில் ஸ்தாபிக்கப்பட்டது. 1977-79 இல் ஏனைய எழுந்தருளி விக்கிரகங்கள், மணி, வாகனம் முதலியனவும் தயாராகின.

1983 இல் பரிவார தெய்வங்களும் ஸ்தாபிக்பெற்று ஆனி 31 ஆம் தேதி மஹா கும்பாபிஷேகம் நடந்தது. மூலஸ்தானத்தில் இவ்வேளையில் தான் சிலா விக்கிரகம் ஸ்தாபிக்கப்பெற்றது. 1980 இலிருந்தே திருப்பணிச்சபை, பரிபாலன சபை என்பன இயங்குகின்றன.

கோயில் நிர்வாகப் பொறுப்புக்களை நடத்தும் நிர்வாகஸ்தராக திரு. கா. நித்தியானந்தம் அவர்கள் இருந்து வருகிறார். நயினாதீவைச் சேர்ந்த திரு. கந்தையா என்பவரால் பாடப்பெற்ற ஊஞ்சற் பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அம்பிகையைத் தரிசித்த மனத் திருப்தியுடன் அடுத்த தலம் நாடிச் செல்கிறோம்.

## இலங்கை சோதிட ஆய்வுமன்றம்

மேற்படி சங்கத்தின் ஆவணிமாதக் கூட்டம் 25-8-85ல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை மூன்று மணியளவில் திரு. நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் ஆரம்பமானது. சென்ற கூட்ட அறிக்கையும் பொருளாளர் அறிக்கையும் முறையே பொதுச் செயலாளராலும் பொருளாளராலும் வாசிக்கப்பட்டு சரியென ஏற்று தலைவரால் கைச்சாத்திடப்பட்டது.

பின்னர் பிரதம பேச்சாளரான திரு. வே. சின்னத்துரை மரீமறைவு என்னும் பொருள் பற்றி ஓர் விரிவுரை ஆற்றினார். அதில் இம் மறைவுக்கு பின் வரும் இலக்கணங்கள் இருக்குமென்பதை கூறினார்

1. இலக்கினமோ இலக்கினாதிபதியோ ராகுகேதுக்களால் மறைக்கப்பட்டால் அத்துடன் தீக்கோள்களின் பார்வை அகப்பட்டால் இந் நிலை வரலாம்.
2. இலக்கினம் பலவீனமாகி பாவசந்தியில் இருந்தால் மேற்படி இலக்கினங்களுடன் இது நிகழும்.
3. இலக்கினாதிபதி 6,8,12ல் இருந்தாலும் மேற்படி இலக்கணங்களுடன் இது நிகழும்.
4. காலசற்பயோகம் நிகழ்ந்தாலும் கலந்துறையும் வாழ்க்கை உண்டாம்.
5. சனி, சந்திரன் செவ்வாய் உறவுகள் உண்டானாலும் இந் நிகழ்ச்சிகள் உண்டாம்.

இதுபோன்ற பல்வேறு ரகங்களால் ஆறு உதாரணங்களின் மூலம் இந்நிலையை விளக்கினார்.

அதன் பின்னர் சமய அனுட்டானங்களும் பஞ்சாங்கங்களும் என்னும் விடயம் பற்றிய கலந்துரையாடலில் திரு. ந. கந்தசாமி ஐயர், திரு. வே. சின்னத்துரை முதலானோர் பங்குபற்றினர். ஈற்றில் தலைவர் இதற்கு தர்மகர்த்தாக்கள் அடங்கிய கூட்டம், மாவிட்டபுரம்கந்தசாமிகோவிலில் நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகளைக் கூறினார். இதற்கு இச்சங்கத்தின் பிரதிநிதியாக திரு. ந. கந்தசாமி ஐயரை அனுப்புவதென்றும் ஆலோசிக்கப்பட்டது. கூட்டம், ஐந்து மணியளவில் நிறைவேறியது.

# ஆய்வு மன்றம்

கே. கங்காதேவி, யாழ்ப்பாணம்.

சிற்பம், கச்சாப் பொருள் வியாபாரம், விவசாயம், சிறுதொழில்கள், ஆடல்பாடல் முதலான கலைத்துறை, ஆசிரியத் தொழில் முதலான ஏதாவதொரு தொழில் மூலம் உமது ஜீவனம் அமைய வேண்டுமென்பது நவநாயகர்தீர்ப்பு "வேண்டுவார் வேண்டுவன ஈவான் இறைவன்" பக்திசிரத்தையுடன் "அவனருளாலே அவன்தாழ் வணங்க" வேண்டியது தானே!

செல்வி. சா. ?சைச்செல்வி,
தையிட்டி, காங்கேசன்துறை.

சாதகம் சரியானது. ரேவதி 4ம் பாதமும் சரியானது. உணர்ச்சிவசப்படாமலும், நிதானமும், முன்யோசனையுடனும் செயல்ப்படப் பெற்றோர் அனுசரணை தேவைதானே! பெற்றோர் அனுசரணையும் பெற்றால் மனம்போல் மாங்கல்யம் வெகுவிரைவில் கிடைக்கும் எனக் கிரகங்கள் கூறுகின்றன.

கு. இராசையா பவானி 8ம் வட்டாரம், ஆத்திநகர்.

மிகுவிரைவில் தொழில்வாய்ப்புக் கிடைக்கும் முயற்சிசெய்க.

M. F. M. Rizvi,
192/115 கிராண்பாஸ் ரோட், கொழும்பு 14.

ஆண்டவனை நம்பி முயற்சி செய்க. முன்னேற்றம் வெகுவிரைவில் எதிர்பார்த்தபடி கிடைக்கக்காலம் சாதகமாக உள்ளது.

திருமதி நிர்மலாதேவி ஜெயந்திரன்.
கோவில் வீதி, நாவிதன் வெளி:

"புத்திரத்தானாதிபன், 6-8-12ல் இருந்தால் புத்திரன் இல்லை" என்று ஒருவிதி கூறினாலும் "புத்திரத்தானாதிபனைக் குருதிருஷ்டி செய்யின் சந்தானம் உண்டு" என்றும் மற்றொருவிதி கூறுகின்றது. பக்தி சிரத்தையுடன் முருகனை வழிபடுவதால் புத்திரசந்தானம் ஏற்படலாம் தானே!

பரமானந்தன் மகேந்திரன்.
சாத்திரியார் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

கல்விமான்கள், பெரியவர்கள் உதவியால் குமாஸ்தா அல்லது பலவித கைத்தொழில் வேலைகள் சம்பந்தப்பட்ட உத்தியோகம் கிடைக்கும்.

இ. அழகேந்திரன், ஆரையம்பதி 1, காத்தான்குடி.

குருமுதலிய பெரியவர்களின் உதவியால் கணக்கப்பிள்ளை அல்லது கஷ்டமான வேலை செய்வோரை மேற்பார்வை செய்தல்போன்ற தொழில் கிடைக்கும்.

செ. இராகவன், இலகடி வீதி, கரவெட்டி.

இராகுதிசை குரு புத்தியின்மேல் உமது எண்ணங்கள் எதிர்பார்த்தபடி நிறைவு பெற முடியும் என்பது நவநாயகர் தீர்ப்பு.

வ. சோதீஸ்வரன்,
5ம் வட்டாரம், மட்/துறை நீலாவணை கி.மா.

வாகன யோகமுண்டு சுக்கிரன், குரு, புதன், சந்திரன் செவ்வாய் ஆகிய இவர்களின் தசா-புக்தி அந்தர பலம் நிகழும் காலங்களில் பெரும்பாலும் சித்திக்கும்.

க. சற்குணராசா,
பழகாமம், 1ம் குறிச்சி, பெரியபோரதீவு.

பொன் வியாபாரம், மருந்து வகைகள், வைத்தியம் முதலானவற்றுடன் சம்பந்தப்பட்ட குமாஸ்தா, அல்லது கணக்கப்பிள்ளை, அல்லது பலவகைக் கைத்தொழில்களுடன் சம்பந்தமான வேலையாட்களை மேற்பார்வை செய்தல் போன்ற ஏதாவதொரு தொழில் சித்தி ஏற்படும்.

செ. ஸ்ரீனிவாசன், துன்னாலை வடக்கு, கரவெட்டி.

பக்தியுடன் கோளறு பதிகத்தைத் தினமும் ஓதி இறைவனை வேண்டிப் பரீட்சைக்குத் தோற்றினால் "நாளென் செயும்"? "முயற்சி திருவினை ஆக்கும்".

K. P. தவராஜா,
31, செல்வநாயகம் வீதி, மட்டக்களப்பு.

I. காலசர்ப்பயோகம் சாதகத்தில் இருக்கிறது.
II. களத்திராதிபனான சுக்கிரனும் செவ்வாயும் கிரகயுத்தசப்பந்தப்பட்டு 8ல் இருக்கிறார்கள். இக்காரணிகளால் போலும் விவாகம் தடைப்பட்டுக் கொண்டிருக்கலாம். உமது விவாக விஷயத்தில் பெற்றோரும் மற்றோரும் நுணுக்கமாகத் தலையிடுவதை உம்மால் மீற முடியாமையும் வேறொரு காரணமாகும். எதிலும் உமது துணிவைப் பொறுத்தே விவாக சித்தி ஏற்படும்.

சி. கந்தையா, கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை.

நடப்பு சுக்கிரன் தசை முடிவதற்கு முன்பே கடன் முதலியன எல்லாப் பிரச்சினைகளும் நீங்கும். மன ஆறுதலுடன் இருக்கவும்.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 40

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்.
2. 1-11-1985க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றுவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 40
சோதிடமலர்
மண்கும்பான் .... சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப 1 | 2 | ஆ 3 | 4 | 5 | த 6 |
| 7 | சா 8 | 9 | 10 | ■ | 12 |
| 13 | ■ | 15 | கோ 16 | 17 | 18 |
| தி 19 | 20 | ■ | 22 | 23 | ம் 24 |
| 25 | 26 | 27 | ம் 28 | ■ | 30 |
| ■ | ம் 32 | 33 | ■ | 35 | ர் 36 |

பெயர் ..............................................

விலாசம் ..............................................

..............................................

**இடமிருந்து வலம்:**

1. சூரியனும் புதனும் கூடி ஒரே வீட்டிலிருப்பின் ...... யோகம் ஏற்படும்.
7. உலகின் முதல் பெண் பிரதமராக ஸ்ரீமாவோ பதவியேற்ற வருடம் குழம்பியுள்ளது.
15. மூன்று பக்கங்களினுல் அமைக்கப்பட்ட மூடிய உருவத்தின் கணிதப் பெயர் வலமிடமாகவுள்ளது.
19. வலமிடமாக உள்ள இதற்குப் பெயர் பெற்றவர் சகுனி.
22. ஆண் பெண் இருவரும் இல்லறம் நடத்த இணையும் வைபவம் ஒளிந்துள்ளது.
25. சனிஸ்வரன் ஆட்சி பெறும் வீடு குழம்பிவிட்டது.
32. அண்மையில் பத்திரிகையில் முக்கிய இடம் பெற்ற பூட்டானின் நகரம் கடையெழுத்து விடுபட்டு வலமிடமாகியுள்ளது.
35. ஆவணி, புரட்டாதிமாதங்கள் இக்காலத்தன.

**மேலிருந்து கீழ்:**

1. ஐந்தாம் பாவத்தின் பிரதான காரகம் குழம்பியுள்ளது.
2. ஒரு கிரகத்தின் தசை புத்தி நடைபெறுங் காலம் அக்கிரகத்தின் ...... காலம் எனப்படும்.
3. சூரியன் சிங்கராசியில் சஞ்சரிக்கும் காலமிது.
4. இலக்கினத்துக்கு 1, 5, 9ம் வீடுகள்.
6. மங்கல கருமங்களுக்கென குறிக்கப்படும் சுப நேரம் இது. குழம்பியுள்ளது.
17. இஸ்லாமியரின் புனித ஸ்தலம் அமைந்துள்ள இடம் தலைகீழாகி கடைஎழுத்துநீங்கியுள்ளது.
20. கிரக பெலங்களுள் ஒன்று இது.
27. ஓரலகு நேரத்தில் செல்லும் தூரம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 39 இன் விடைகள்:**

**இடமிருந்து வலம்:**

1. பூர்வபக்ஷம் 7. சரஸ்வதி 15. நந்தன
20. உத்தமம் 25. சம்சாரம் 31. நாம்
35. வா(ர)ம்

**மேலிருந்து கீழ்:**

1. பூரணை 2. (பா)வரி 3. வசந்தம்
4. ஸ்தம்பம் 5. நக்ஷத்திரம் 18. மன(காரகன்)
20. உச்சம் 25. நாசா

**பரிசு பெறுவோர்:**

1-ம் பரிசு: தி. சாந்தகுமாரன், "பிருந்தாவனம்" ஆத்தியடி - பருத்தித்துறை

2-ம் பரிசு: த. ஆ. சங்கரப்பிள்ளை பத்தாவத்தை - இளவாலை.

3-ம் பரிசு: சி. ஆறுமுகம், "முருகனருள் வாசம்" — மிருசுவில்.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.




## மில்க்வைற் சலவைப் பவுடர்

துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப் பவுடரை வாங்கி உபயோகியுங்கள்.

மில்க்வைற் சலவைப் பவுடர் துணிகளில் உள்ள அழுக்கை ஊடுருவி துப்பரவு செய்கிறது.

பழைய விலை (56 கிராம்) ரூ. 2/50
புதிய விலை (56 கிராம்) ரூ. 2/00

5 மில்க்வைற் சலவைப் பவுடர் பக்கற்றுக்களை கொடுத்து மில்க்வைற் செய்தி ஒன்றை அல்லது அழகிய ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 40-80 |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல் வழி) | வருட சந்தா | ,, 78-00 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 150-00 |
| | இங்கிலாந்து | (விமானவழி) | வருட சந்தா | ,, 175-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-40 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280